# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் – 41
விலை ரூபாய் 20.00

தீபம்-41
ஆடி இதழ்-2017 ,ஆரம்பம் 15 மாசி-2013.



திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 3202532


## "பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்." (மத் : 9:9)



## ஆயரின் செய்தி

**இறை இயேசுவில் அன்புள்ளங்களே,**

ஜூலை மாதம் தேவ அழைத்தலின் மாதமாகக் கணித்து இம்மாதம் நாம் சிறப்பிக்கும் புனிதர்களையும் இவர்கள் பெற்ற அழைப்பு, புனித வாழ்வு பற்றியும் சிந்திக்க அழைக்கின்றேன். தூய தோமா (03ம் திகதி). இவர் இயேசுவோடு வாழ்ந்த திருத்தூதர். இயேசுவின் போதனைகள் புதுமைகளுக்குச் சான்று பகர்ந்தாலும் இயேசு உயிர்த்து விட்டார் என சீடர்கள் கூறிய போது நம்ப மறுத்தவர். பின் இயேசு காட்சி தந்து தனது கைகளின் தழும்புகளைக் காட்டி நம்பிக்கையில் தோமாவை வழிநடத்தினார்.

தூய மரிய கொரற்றி (06). தூய்மையும் கற்பும் நிறைந்த வாழ்வு வாழ்வதில் உறுதியாக இருந்தவர். அலெக்சாண்றோ எனும் வாலிபன் மரியகொரற்றியைத் தவறான செயலுக்குக் கட்டாயப்படுத்தினாலும் மரியகொரற்றி மறுத்ததால் 14 தடவைகள் கூரான கத்தியால் குத்தப்பட்டார். இறக்கு முன் அலெக்சாண்றோவை மன்னிப்பதாகவும் கூறினார். இம்மாதம் 15ம் திகதி சிறிய குருமட திருவிழா. குருமட மாணவர்களை உற்சாகப்படுத்தவும் தேவ அழைத்தலுக்காக செபிக்கவும் இந்நாள் ஒதுக்கப்பட்டுள்ளது. தூய மகதலா மரியா (22) திருவிழா. இவர் இயேசுவின் உயிர்ப்பு பற்றி சீடர்களிடம் வந்து கூறிய முதல் பெண், சீடர். தூய சுவக்கீன், தூயஅன்னம்மாள் (26). இவர்கள் மரியாவின் பெற்றோர். இயேசுவின் பிறப்பிற்கு மரியாவின் ஆன்மீக ஆயத்தம் எந்தளவிற்கு முக்கியமானதோ அதே போல மரியாவின் ஆன்மீகத்திற்கு அவரது பெற்றோரின் விசுவாசம், தெய்வபயம் என்பன அவசியமானதாக இருந்தது. இவர்களது வாழ்வு இன்றும் பெற்றோருக்கு சிறந்த உதாரணம். தூயமார்த்தா (29). இவர் பணிவிடை செய்வதில் பரபரப்பாக இருந்தவர். அதைவிட இறைவாக்கிற்கு முன்னுரிமை கொடுப்பது அவசியம் என்பதை இயேசு சுட்டிக்காட்டி மார்த்தாவை வழிநடத்தினார். சுதேச குருக்கள், துறவறத்தவர் ஞாயிறு (30). இன்று தேவஅழைத்தல் தினமாகவும் எம்மறைமாவட்டத்தில் சிறப்பித்து தேவஅழைத்தல் பெருக செபிப்போம். தூய லொயோலா இஞ்ஞாசியார் (31). உயர்குடிமகனாக வாழ்ந்த இவர் உலக காரியங்களில் முழுநாட்டம் கொண்டிருந்தாலும் யுத்தத்தின் போது குண்டடிபட்டு ஒரு காலை இழந்தார். இக்காலத்தில் இயேசுவால் கவரப்பட்டு மனம்மாறி பின் இயேசு சபையை உருவாக்கினார்.

இவ்வாறு தூய தோமையார், தூய மரிய கொரற்றி, தூய மகதலா மரியா, தூய சுவக்கீன் அன்னம்மாள் தூயமார்த்தா, தூய இஞ்ஞாசியார் போன்ற இப்புனிதர்களின் வாழ்விலிருந்து நாம் கற்றுக் கொள்ளக்கூடிய பாடங்கள் பல......

தொடர்ச்சி 02ம் பக்கத்தில்......



## வெல்வெரி தூய யாகப்பர் ஆலயம் வருடாந்தத் திருவிழா – 2017

வெல்வெரி தூய யாகப்பர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா இவ்வருடமும் மறைமாவட்ட ஆயர் அதி. வண. நோயல் இம்மானுவேல் ஆண்டகையின் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

**திருவிழா விபரங்கள் - 29ம் திகதி ஜூலை 2017**
**திருப்பலி - காலை 7.30 மணி.**

### ஒன்றுகூடல்

திருப்பலியின் முடிவில் தூய யாகப்பரின் திருச்சுரூப ஆசிர்வாதம் இடம்பெறும். அதன்பின் விசுவாசிகளுக்கான ஒன்றுகூடலும் விநோத விளையாட்டுக்களும் இடம்பெறும். அனைவரையும் திருவிழாத் திருப் பலியில் பங்குபற்றித் தூய யாகப்பரின் அருளைப் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



### புனிதர்களின் உடற்கூறுகள்

**தூய ஜெம்மா கல்கானி (12. 03. 1878 - 11. 04. 1903 )**
**தூய கல்கத்தா தெரேசா ( 26. 08. 1910 - 05. 09. 1997)**

தூய ஜெம்மா கல்கானியின் எலும்பின் ஒரு சிறு பகுதியும், தூய கல்கத்தா தெரேசாவின் தலைமுடியின் ஒரு பகுதியும் விசுவாசிகளின் வணக்கத்திற்காக காட்சிப்படுத்தப்படவுள்ளன.



## இயேசுவோடு 12 மணி நேரம் விசேட நற்கருணை ஆராதனை



இடம்: தூய திருமுழுக்கு யோவான் ஆலயம் சாம்பல்தீவு.
காலம் : 12 ஆகஸ்ட் 2017 சனிக்கிழமை
நேரம் : மதியம் 12 மணிமுதல்
இரவு 12 மணி வரை

**திருகோணமலை மறைமாவட்டத் திருச்சபையாக செபத்தில் இணைந்திடுவோம்.**

## ஆயர்த்துவ திருப்பொழிவு 2ம் ஆண்டு நிறைவு

**வாழ்த்துக்கள் 25.07.2017**



திருமலை மறைமாவட்ட
ஆயர் மேதகு கிறிஸ்ரியன் நோயல்
இம்மானுவேல் ஆண்டகைக்கு
ஆயர் பணியில் இரண்டாம்
வருடத்தில் கால் பதிக்கும் நாளிலே
எங்கள் இதயங்கனிந்த
நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக
பலதரப்பட்ட சவால்கள்
நிறைந்து செல்லும் இக்காலத்தில்
இறைவனின் பணியே
தன்பணி எனக்கொண்டு
இரண்டு ஆண்டுகளை
சிறப்புறக் கடந்த
ஆயரவர்கள்
இன்னும் மேலான
நற்பணிகளால்
தொடர்ந்தும் பணிகளை
சிறப்புற ஆற்ற
எங்கள் இதயங்கள் கனிந்த
இனிய நல்வாழ்த்துக்கள்
உரித்தாகுக....

*– திருமலைத்தீபம் ஆசிரியர், பணியாளர்கள் மற்றும் திருகோணமலை மறைமாவட்டம் –*

## ஆன்மீக பயணம் - நூல் வெளியீடு




திருமதி. F. S. ஆஞ்சலீன் என்பவரால் எழுதப்பட்ட 'ஆன்மீக பயணம்' என்ற நூல் கடந்த 24.06.2017 இல் தூய மரியாள் பேராலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக மேதகு ஆயர் கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களும் சிறப்பு விருந்தினராக குருமுதல்வர் அருட்பணி ரி. கிங்ஸ்லி றொபட் அவர்களும், உதவிப்பங்குத்தந்தை அருட்பணி றொய்சன் ஸ்பாக்ஸ் தலைமை தாங்கி சிறப்பித்தனர்.

தகவல் : நிருபர் – தூய மரியாள் பேராலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நான் கனிவும் மனத் தாழ்மையும் உடையவன் (மத். 11:29)**

# உங்களோடு பேசுகிறேன்..



அருட்பணி N.C அருள்வரதன்

மீண்டும் உங்களோடு பேச எனக்கு ஒரு வாய்ப்பு. அது எனக்குப் பெருமகிழ்வே. இம்மாத்தின் 25ம் திகதி மறைமாவட்டத்திற்கு ஒரு சிறப்பான நாளாகும். நமது மறைமாவட்ட ஆயர் மேதகு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் தமது ஆயர் பணியேற்று இரண்டு வருடங்களை நிறைவு செய்கின்றார். ஆயர் அவர்களின் பணி மேலும் சிறப்படைய இறைவனை வேண்டுவோம். சுதேச குருக்களின் தினமும் துறவற சபையினரின் தினமும் இம்மாதத்திலே கொண்டாடப்படுகின்றது. நமது மறைமாவட்டத்தின் சிறிய குருமடமான தூய யோசேப் வாஸ் குருமடத்தினர் தமது விழாவினை இம்மாதம் 15ம் திகதி கொண்டாடுகின்றார்கள். குருமட அதிபருக்கும் மாணவர்களுக்கும் எமது வாழ்த்துக்கள்.

மறைமாவட்டத்தின் பல ஆலயங்களிலும் தொடர்ச்சியான 12 மணிநேர நற்கருணை ஆராதனைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. வழிபாடுகள் வெற்றிகளைக் காண நாமும் வேண்டுகின்றோம்.

இம்மாதத்திலே "எகெட் கரித்தாஸ்" நிறுவனத்தினர் தமது பணியிலே 38 ஆண்டுகளில் கால் பதிக்கின்றனர். தொடர்ந்தும் ஆற்றும் பணிகள் நிறைந்த வெற்றிகளைக் காண எமது வாழ்த்துக்கள்.

இம்மாதத்திலே பல ஆலயங்கள் தமது பெயர் கொண்ட புனிதரின் விழாவினைக் கொண்டாடுகின்றார்கள். குறிப்பாக புல்மோட்டை மடு மாதா ஆலயம், வரோதய நகர் மடுமாதா ஆலயம், கந்தளாய் திரு இருதயநாதர் ஆலயம், கங்கை தூய பேதுரு தூய பவுல் ஆலயம், இருதயபுரம் திரு இருதயநாதர் ஆலயம், சிந்தாத்திரை மாதா ஆலயம் சலப்பை ஆறு இவைகளைக் குறிப்பிடலாம். பங்குத்தந்தையருக்கும் பங்கு மக்களுக்கும் இறை ஆசிருடன் கூடிய நல்வாழ்த்துக்கள்.

இம்மாதத்திலே இன்னும் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். "சர்வதேச அகதிகள் தினம்" பலநிலைகளாலும், பல வழிகளாலும் பாதிக்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கும் அகதிகள் இவர்களின் வாழ்வு புதுவாழ்வாய் மாற இறைவனை வேண்டுவோம்.

ஆட்சியினையும் பேச்சு முறைகளையும் பார்க்கும் போது மதங்கள் மதிக்கப்படாமலும் கேவலப்படுத்தப்பட்டுப் பேசப்படுகின்ற நிலைகளும் மிகவும் வேதனைப்பட வேண்டியதாகும். இப்படியான செயல்களில் ஈடுபடுகின்றவர்கள் மாற வேண்டுமென இறைவனை வேண்டுவோம்.

மேலும் சிறுபிள்ளைகள் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்படுவது பெருகிக் கொண்டு செல்கின்றது. இப்படியான செயல்களில் ஈடுபடுவோர் இனங்காணப்பட்டு மிகக் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். அது மற்றவர்களுக்கு ஒரு பாடமாகவும் அமைய வேண்டும்.

நல்லவைகள் வளர வேண்டும் தீயவைகள் மறைய வேண்டும் என்பதை மனங்களிலே பதிப்போம். நல்லவைகள் நிகழ இறைவனை வேண்டிக் கொண்டு மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக் கூறி நிற்கின்றேன்.

1ம் பக்கத் தொடர்ச்சி....... ஆயரின் செய்தி

அழைப்புக்குமுன், அழைப்புக்குப்பின் என இவர்களது அனுபவங்கள், அர்ப்பணம். வித்தியாசமான பணி, ஆண்டவருக்காக வாழத் துடிக்கும் உள்ளம் என பல விடயங்களை நாம் கற்றுக்கொள்ளலாம். இன்று எம்மையும் அழைக்கும் இறைவனுக்கு அர்ப்பணிப்போடு வாழ்ந்து காட்டுவோம்.

இம்மாதம் 29ம் திகதி வெல்வெரியில் மறைமாவட்ட ஒன்றுகூடல் நடைபெறும். இதற்கான ஆயத்தங்களை குருக்கள் செய்கின்றார்கள். குடும்பமாகவும் பங்குச் சமூகமாகவும் வந்து திருப்பலியிலும் ஏனைய நிகழ்வுகளிலும் பங்குபற்றி சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். எமது மறைமாவட்டத்தில் தேவஅழைத்தல்கள் பெருக வேண்டுமென எப்போதும் செபிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இறைவன் எப்போதும் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவில்,
பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்

## சமாதானம் காப்போம்

இயற்கையின் சீற்றமும் அர்த்தமற்ற யுத்தமும்
உருவாக்கியதே உலகில் அகதிகளை
உள்ளத்தில் சுமை உடலிலும் சுமை
நிம்மதி என்பது இல்லாத சொத்து
நிர்கதியாக பாரினில் பரிதாப வாழ்க்கை
ஒருநொடியில் பிடிதவறி
உருவானதே அகதி வாழ்க்கை
இன, மத, நிற பேதங்களில்லா அகதிகள்
முகாம்களே அவர்கள் புகழிடம்
பசியும், பிணியும் சாகாவரம்
வேதனையும் சோதனையும் தேசிய சொத்து
மக்களிடையே மனிதநேயம் இல்லை.
மனித மாண்புகள் மங்கிப்போயின
சகோதரத்துவம் சாகடிக்கப்பட்டன
சமத்துவப் பேச்சும் அர்த்தமற்றுப் போயின
அகதிகள் வாழ்வு வளம்பெறச் செய்யவே
சர்வதேசமே அகதிகள் தினமதை உருவாக்கியதே
மனிதம் காத்து, மனிதநேயம் வளர்த்து
மன்னிக்கும் மனதுடன் அயலவர் துன்பம்
போக்கி
பகையினை மறந்து, சமாதானம் காப்போம்.

ஆக்கம் : தம்மிக்கா யேசுதாசன்,
அன்புவழிபுரம்,
திருகோணமலை

## எமக்காக வந்த புனிதன்

வேற்று நாட்டு வாசியவர்
வேட்கை கொண்டாரே எம் மண்ணில் பணிபுரிய
எடுத்த முடிவை ஏந்திச் செல்ல
எத்தனையோ தடைகளை தனிமையாய் தாண்டினார்.
எம் மண்ணின் புனிதன் அவர்
ஏற்றுக் கொண்டாரே பிச்சை வேடம்
ஏழ்மை எனும் அரும் செல்வத்தை
ஏற்றி வைத்தார் எம் உள்ளங்களில்
முற்பது வருட பணியின் பலனை
முற்ற வைத்தார் எம் நெஞ்சங்களில்
இறை வார்த்தைகளின் விதையாக
பற்றுடனே பின் செல்வோம் எம்
பாதுகாவலர் யோசப்வாஸின் வழியினில்
அவர் பற்ற வைத்த அருளின் தீபத்தை
அணையாது காத்திடுவோம் அவர்
எமக்காய் வந்த புனிதர் என்ற பற்றுடனே

ஆக்கம் : T.ஜெரோம்
தூய ஜோசேப்வாஸ் சிறிய குருமடம்
சாம்பல்தீவு



**தூய லொயலா இஞ்ஞாசியார்**
**மறைமாவட்ட பாதுகாவர் தினம்**
**இயேசுசபை குருக்களின் விழா**
**31.07.2017**

***செபிப்போம் வாழ்த்துவோம்...!***

# இறை அனுபவத்தின் ஓர் இனிய அழைப்பு

கிறிஸ்டி முருகுப்பிள்ளை

ஆயரிடமிருந்து ஓர் அழைப்பு...அவசரமாக! என்னவாயிருக்கும்... என்னுள் பல சிந்தனைகள் பல மின்னி மறைந்தன...

வழக்கமான புன் சிரிப்போடு வரவேற்றார்...

"இந்தியாவுக்கு போயிருக்கிறீரா?" "இல்லை மைலோட்.."

"ஓகே.. மே 8ம் திகதி பெங்களூர் செல்ல ஆயத்தமாகுங்கள்"

"சரி"ஏனென்று கேட்கவில்லை. பெங்களூருக்கு போவதென்பதற்குரிய காரணம் ஓரளவு புரிந்திருந்தது. ஏற்கனவே பலர் சென்று வந்திருப்பதும் தெரிந்திருந்தது... இதன் விளக்கத்தை அருட்பணி றொஹான் பேர்ணாட் கூறினார். திருமலையிலிருந்து ஐந்து பேரை செலக்ற் பண்ணியுள்ளார்கள். 'அலை ஓசை' யிலிருந்து உங்களை தெரிவு செய்துள்ளோம். எதற்கும் 2ம் வத்திக்கான் சங்க ஏட்டை ஒரு தடைவை வாசித்துக்கொள்ளுங்கள். பாஸ்போர்ட் இருக்கிறதா? "ஓம் பாதர்" 2ம் வத்திக்கான சங்க ஏட்டைத் தந்தார் மலைத்து விட்டேன். இவ்வளவு பெரிய புத்தகத்தை வாசித்து கிரகித்து புரிந்து கொள்வது? மனதுள் பெரிய பாரம். மறுநாள் அருட்பணி அன்ரூ ஸ்ரிபன் அவர்களிடமிருந்து ஓர் அழைப்பு. "உங்கள் பாஸ்போட்டையும் நான்கு போட்டோக்கள் விசாவுக்காகவும் உங்கள் பேங்க் புத்தகத்தின் போட்டோ கொப்பியையும் நாளைக்கே தந்து விடுங்கள்.."

"எப்போ பாதர் பயணம்?.." "மே 8 என நினைக்கிறேன் சரியா~க் தெரியாது.." "மற்ற நால்வரும் யார் பாதர்..?" "பாக்கிய நாதன், ஜெப மணி சாந்தனீற்றா மற்றும் மறைக் கல்வி நடு நிலையத்திலிருந்து புஸ்பலதா. கேட்ட ஆவணங்களை கொடுத்து விட்டேன்...நாள் நெருங்கியது. எதுவித பதிலுமில்லை...

6ம் திகதி சொன்னார்கள் இருபத்தாறாம் திகதி தான் பயணம் என்று.



அப்பாடா... நாள் இருக்கிறது. நாள் நெருங்க நெருங்க பெயர் குறித்தவர்களுக்கு பல பிரச்சனைகள். அதனால் சாந்தனீற்றாஇ புஸ்பலதாவால் தவிர்க்க முடியாத காரணங்களால் வரமுடியவில்லை. பதிலாக பெரிய கடையிலிருந்து ஆன் றொஸ்ரினா மட்டும் புதிதாக சேர்ந்தார்...

ஆக... ஐந்து பேர் நான்காகியது. இருபத்தாறாம் திகதி ஆயர் அழைத்து நிகழ்ச்சி நிரல்.. எழிகாட்டிகள் விபரம் எயார் ரிக்கற்இ தங்க வேண்டிய இடங்கள் செல்ல வேண்டிய பஸ் விபரங்கள் ஆகியவற்றையும் தந்து "நால்வருக்கும் நீங்கள் தான் பொறுப்பு ... ஆனால் நால்வருக்கும் இந்தியா புதிது... நீங்கள் ஏற்கனவே பல நாடுகள் சென்ற படியால் அனுபவமுண்டு...பார்த்துக் கொள்ளுங்கள்" என்றார்..

மகிழ்ச்சியும் பதட்டமும் என்னுள் படரத் தொடங்கியது. மறுநாள் அருட்பணி அன்ரூ ஸ்ரிபன் எங்களை வேனில் எயார் போர்ட்டிற்கு அழைத்துச்சென்றார். செக்கிங் செயற்பாடுகள் முடிவடைந்து பாஸ்போட் ஓகே பண்ணிய பின் உள்ளே சென்றோம்.

விமான நிலைய ஒழுங்கில் பல மாற்றங்கள் செய்யப்பட்டு ஏறி இறங்கிய பின் சரியான இடத்துக்கு அழைப்பினார்கள்.

அதிகாலை ஒரு மணிக்கு எமது பயணம் ஆரம்பித்தது.

ஒன்றரை மணித்தியால பயணம்...

இரண்டரை மணிக்கு பெங்களூர் விமான நிலையத்தை அடைந்தோம்.. விசாலமான விமான நிலையம்... ஒரே சமயத்தில் பல விமானங்கள் வந்திறங்கியதால் சனக்கூட்டம் அதிகம்... தமிழ், சிங்கள மொழி பேசும் மக்களுடன் வாழ்ந்த எமக்கு ஆங்கிலம், மலையாளம், ஹிந்தி, தெலுங்கு, சீன மொழி போன்ற பல மொழி~களை ஒரே சமயத்தில் கேட்கும் போது மண் சட்டிக்குள் தான் குதிரை ஓடிக்கொண்டிருக்குறோம் என்றே எண்ணத்தோன்றியது. விமானத்தில் பிரயாணம் ஒன்றரை மணிநேரம் மட்டுமே .. விமான நிலையத்தில் இரண்டு மணிநேரம் கியுவில் நின்றோம்.. இறுதியில் வெளிநாட்டுப் பயணிகள் மட்டுமே நிரப்ப வேண்டிய படிவத்தையும் பாஸ்போட்டையும் இமிக்கிறேசன் ஒப்பிசரிடம் நீட்டினோம்...

எங்கள் நால்வரையும் பார்த்தவர் ...

வட் இஸ் NBCLC... தெயார் இஸ் நோ அட்ரஸ்... போன் நம்பர்..? எங்களுக்கு தெரியாதே ? பெங்களூரு NBCLC என்று மட்டும் தானே தெரியும் ? வேறெதுவும் தெரியாதே..? எப்படி விடையளிப்பது ? "வெயிற் தெயார்.." தள்ளி நிற்கச் சொன்னார்.

பதட்டம் அதிகரித்தது... ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு National Bibilical Centre Of Laity Commission, Third Street, Bengalooru என்றெழுதி எனது போன் நம்பரையும் எழுதினேன்.. அது சரியோ பிழையோ... எனினும் அவனுக்கு திருப்தியில்லை. பின்னர் நான் "ஐ ஆம் ஏ டிரக்டர் ஒப் எடியூகேசன்... வீ ஆ கமிங் போ வேர்க் ஷொப்" என்றேன். எனது இலங்கை ஆங்கிலம் அவனுக்கு புரியவில்லை. பின்னர் "ஐ ஆம் ஏ டைரக்ரர் ஒப் எஜூகேசன். வீ ஆர் கம்மிங் போர் வர்க்சொப்" என்றேன்.

"ஓகே.." என்றவன்.பாஸ்போட்டில் சீலைக் குற்றியதோடு ஒரு மட்டையில் எனது பெயர் விலாசம் விபரங்களை வாங்கிக் குறித்துக் கொண்டு விட்டான்.

இந்த தாமதத்தில் எங்கள் லக்கேஜ்களை தேடினோம்... ஸ்ரீ லங்கா எயார் லைன் பிளைற்றின் பெல்ட் வெறுமையாக சுற்றியது.

தொடர்ச்சி 05ம் பக்கத்தில்..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளைவின் பயன்கள் ......

அருட்பணி NC அருள்வரதன்




வானும் மழையும் நீரும் பயிரும்
சேரும்போது விளைவு அது
பாரிய உயர்விளைத்தந்து அது
பலன்களை நிறைந்தே பொழிந்திடுமே

அன்போடு இணையும் உறவுகள்
ஆவல் கொண்டே ஒருயிராய்
பிரியாது என்றும் ஒன்றிணைந்தே
பெருமைகள் சேர்க்குமே வாழ்வினிலே

பகையும் இல்லை பழிகளுமில்லை
அன்பால் இணைந்த நட்பு அது
இன்னலோ இடரோ எது வரினும்
உண்மை அன்பது உடைவதில்லையே

கடமை கண்ணியம் நேர்மையினை
கடைபிடித்தே அதை வாழ்பவர்கள்
உண்மையில் பெரிதான மனிதரென்று
உலகமே இனங்கண்டு போற்றிடுமே



நல்லது விளைந்திட வேண்டுமானால்
நல்லதே பயிரிடப்பட வேண்டும்
உள்ளமே மகிழ்ந்து பொலிவுறவே
உயர்ந்த பலன்களைக் காண்போமே

## மறை மாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் செயற்குழு நிலாவெளி பங்கிற்கு விஜயம்

புதிதாக இணைந்துகொண்ட நிலாவெளிப் பங்கின் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினரை மறை மாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் செயற்குழு இயக்குனர் சகிதம் கடந்த 2017 ஜூன் மாதம் 18ம் திகதி தரிசித்து திருப்பலி ஒப்புக்கொடுத்து ஆலோசனைகள் வழங்கினர்.

தகவல் : கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய பணியகம்
திருகோணமலை

புகைப்படம் 12ம் பக்கத்தில்......................

## திருகோணமலை மறைமாநில பங்குகள் ஆணைக்குழுக்கள் மற்றும் கன்னியர் இல்லங்களிலிருந்து வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக எகெட் கரித்தாஸ் பணியகத்தினூடாக சேகரிக்கப்பட்ட பங்களிப்பு விபரம்.

| | |
|---|---|
| 01. மறைமாவட்டஆயர் மற்றும் குருக்கள் | 100,000.00 |
| 02. தூய மரியாள் பேராலயம் | 101,100.00 |
| 03. இறை இரக்கத் திருத்தலம் ~ அலஸ்தோட்டம் | 50,000.00 |
| 04. தூய குவாடலூப்பே அன்னை திருத்தலம் | 17,400.00 |
| 05. தூய சூசையப்பர் ஆலயம் ~ நிலாவெளி | 15,410.00 |
| 06. எகெட் கரித்தாஸ் பணியாளர்கள் | 10,850.00 |
| 07. அப்போஸ்தலிக்க கார்மேல் சபை | 10,000.00 |
| 08. தூய சதாசகாய மாதாஆலயம் ~ கந்தளாவ ~ புதிய ஆடைகள், கொப்பிகள், | 6,750.00 |
| 09. திருமறைக் கல்விநிலையம் | 5,000.00 |
| 10. திருச்சிலுவை கன்னியர் சபை | 5,000.00 |
| 11. தூய அந்தோனியார் ஆலயம் ~ மூதூர் | 5,000.00 |
| 12. திருக்குடும்ப கன்னியர் சபை ~ பாலையூற்று ~ உலர் உணவுப்பொருட்கள், | 4,000.00 |
| 13. மரியாயின் சேனை சகோதரிகள் | 2,500.00 |
| 14. தூயசம்மனசுகள் சபை ~ உப்புவெளி | 2,100.00 |
| 15. தூய லூர்துஅன்னைதிருத்தலம் ~ பாலையூற்று | 2,000.00 |
| 16. தூய செபமாலை மாதா ஆலயம் ~ குச்சவெளி ~ | பால் மாபொதிகள் |
| 17. தூய வனத்துஅந்தோனியார் ஆலயம் ~ செல்வநாயகபுரம் ~ | உலர்உணவுப்பொருட்கள் |
| 18. தூய திருமுழுக்குயோவான் ஆலயம் ~ சாம்பல்தீவு | ~ |
| 19. குழந்தை இயேசு ஆலயம் ~ உவர்மலை | ~ |
| 20. தூய அந்தோனியார் ஆலயம் ~ சீனன்குடா | ~ |
| 21. கிறீஸ்து அரசர் ஆலயம் ~ கன்னியா | ~ |
| 22. திருஇருதயநாதர் ஆலயம் ~ இருதயபுரம் | ~ |
| 23. தூய பற்றிமா மாதா ஆலயம் ~ கப்பல்துறை/தம்பலகாமம் | |
| **மொத்தம்** | 337,110.00 |

தகவல்: முகாமைத்துவம்
எகெட் கரித்தாஸ்
திருகோணமலை.

தொடர் - 05

# நல்லாசிரியர்: ஆளுமையும் ஆன்மீகமும்





## ஆசிரியரின் சுயதோற்றமும் உடல்சார் மொழியும்

அருட்தந்தை எஸ். அன்ரனி பொன்சியன் அமதி (BTh,B.A. (Hons), PGDE, MEd)

ஆசிரியர் வார்த்தைகளால் மட்டும் கற்பிப்பவர் அல்ல. அவர் வகுப்பறைக்குள் நுழைந்தவுடன் மாணவர்களில் உடனடியாக, சில வேளைகளில் புலன்களால் புரிந்து கொள்ள முடியாத பதில் மொழி (Reaction) ஏற்படும். அவரின் தோற்றம் நடையுடை பாவனை எல்லாம் மாணவரில் பல விளைவுகளை / தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. ஆசிரியருக்கு ஏற்படும் மனக்குழப்பம், உடல் உபாதை போன்றவற்றை அவரின் முக பாவனையிலிருந்தே மாணவர்கள் புரிந்து கொள்வர். அவை மாணவரை குழப்பத்திற்குள்ளாக்கலாம். இவை எல்லாம் அரிதாக நடக்கக்கூடியவையாகிலும் கவனத்திற் கொள்ளப்படக் கூடியவையாகும். வழமையாக ஆசிரியர் மலர்ந்த முகத்தோடு, உற்சாகமான தோற்றத்தோடு வகுப்பறைக்குள் நுழைவார். பின்னர் சிறிய செபத்தோடு தனது பணியை மகிழ்ச்சி நிறைந்த சவாலாகவும், முதன்மை ஆசிரியரான இறைவனுக்கு பணி செய்யும் அரிய சந்தர்ப்பமாக ஏற்றுக் கொள்வார்.

உடல் மொழி / சைகை மொழி நல்ல ஆசிரியரின் பெறுமதியான சொத்தாகும். முக்கியமானதும், கடினமானதுமான விடயம் எதுவெனில் வாழ்நாள் முழுவதும் இம்மனப்பான்மையை பேணிக்கொள்வது நல் ஆசிரியர் ஒருவரின் நற்பண்பாகும்.

பெண் ஆசிரியர்கள் இவ் விடயத்தில் பிரத்தியேக கவனம் செலுத்துதல் வேண்டும். அவர்கள் சீராகவும், தூய்மையாகவும் ஆடை அணிவது கட்டாயமானதாகும். அனேக பெண்களை போல அவர்களும் வசீகர தோற்றமுள்ளவர்களாக இருக்கலாம். ஆனால் இயற்கையாக தம்மிடம் இல்லாத அழகை மிகைப்படுத்தலாகாது. மாணவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கு பதிலாக கவனக்கலைப்பானாக அமைந்து விடலாகாது. சிறப்பாக ஆண் மாணவர்கள் மத்தியில் மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும்.

ஆசிரியர் என்ன மனநிலையில் இருந்தாலும் வகுப்பறைக்குள் நுழையும் போது நல்ல மனநிலையோடும், உற்சாகமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும். ஏதாவது துக்க சம்பவங்கள் வீட்டில் நடந்திருக்கும் பொழுதோ, உடல் உபாதைகளின் பொழுதோ மேற் கூறியவாறு உற்சாகமான மனநிலையை தக்க வைத்துக் கொள்வது மிக கடின~மானதாக அமைந்து விடுவதுண்டு. தனது சிக்கல்களை தீர்க்க முற்படும் அதே வேளை வகுப்பறையில் தனது மகிழ்ச்சிகரமான சுய தோற்றத்தின் அவசியத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் முதன்மை ஆசிரியரான இறைவன் பால் தனது மனத்தை எழுப்பி வல்லமையை வேண்டிக் கொள்ளல் வேண்டும். தனது வாழ்க்கையில் என்னதான் துன்பியல் நிகழ்வுகள் நடைபெற்றாலும் மேடை நிகழ்வில் பார்வையாளர்களை மகிழ்விக்கும் நகைச்சுவை நடிகன், கோமாளி (Clown) போல ஆசிரியன் இருக்க வேண்டியதில்லை. இருந்தும் தனது மனக் கவலைகளை, துன்பங்களை மாணவர் மேல் சுமத்தாமல் பார்த்துக் கொள்ளல் முக்கியமானதாகும்.

மாணவர்களின் வளர்ச்சியை மையமாகக் கொண்ட கற்பித்தலும் அதே வேளை கல்வி மகிழ்ச்சிகரமான அனுபவமாக அமைதல் வேண்டும். இம் மனப்பாண்மையை தன்னுள் வளர்த்துக் கொள்ள ஆசிரியர் முயற்சிக்க வேண்டியவராக இருக்கின்றார்.

தொடரும் ......................

## மரியாயின் சேனை வெளிக்களவிழா 24, 25ம் திகதிஆனி – 2017

திருகோணமலை மறைமாவட்ட மரியாயின் சேனை வெளிக்கள விழாவானது கடந்த 24ம், 25ம் திகதி ஆனி மாதம் 2017 அன்று யாழ்ப்பாணம் சாட்டி மாதா கோவிலில் சிறப்பிக்கப்பட்டது. இவ்விழா நல்ல முறையில் நடந்தேற உதவிய திருகோணமலை மறைமாநில ஆயர் அவர்களுக்கும், கலந்து சிறப்பித்த மரியாயின் சேனை சகோதரிகளுக்கும், சாட்டி மாதாகோவில் பங்குத்தந்தை அருட்பணி அ.பி~.லொசிங்டன் (அ.ம.தி)அவர்களுக்கும் எம்மை வழிநடத்திய மரியாயின் சேனை ஆன்மீக இயக்குனர் அருட்பணி.க.நிதிதாசன் அவர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள்.

தகவல்: மரியாயின் சேனை
திருகோணமலை

புகைப்படம் 12ம் பக்கத்தில்..................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டிக்கதை

FR.. NC

ஒரு தாயின் இருபிள்ளைகள், இருவரும் படிக்கிறார்கள். தம்பி சிறுவயதிலிருந்தே சித்திரம் வரைவதில் நல்ல ஈடுபாடு. நன்றாக வரைவான். அண்ணனுக்கு சித்திரத்தில் அவ்வளவு நாட்டமில்லை. அவனைப் பொறுத்தவரை நன்றாகப் பேசுவான். பேச்சுப் போட்டிகளென்றால் நேரத்தைச் செலவிட்டுப் போட்டியிட்டு வெற்றி பெறுவான். பெற்றோருக்குப் பிள்ளைகள் இருவராலும் பெருமை தான். ஒன்றை நாம் மறக்க கூடாது.

"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்" என்பது உண்மைதான்.

# தூய யோசப்வாஸ் வாழ்வின் பாதையில் சுவாமி ஞானப்பிரகாசர் அ.ம.தி

ஒல்லாந்தரின் ஆட்சியில் இலங்கையில் முடங்குண்ட கிறிஸ்தவத்தை கட்டியெழுப்பிய தூய யோசப்வாஸ் அவர்களையும் தமிழ் மொழியின் பெருமையையும் கிறிஸ்தவத்தையும் கட்டியெழுப்பி தமிழ் மொழி பேசும் கிறிஸ்தவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழும் அருட்தந்தை சுவாமி ஞானப்பிரகாசர் அ.ம.தி. அவர்களையும் ஒப்பிட்டு ஓர் ஆய்வினை மேற்கொள்ள விளைகின்றேன். இக்கட்டுரையின் நோக்கம் என்னவெனில் கலாச்சாரம்,மொழி, பண்பாடு ஆகியவற்றினால் ஆழப்பட்ட எமக்கு கிறிஸ்தவம் அவற்றினூடாக புதிய அர்த்தத்தை அளித்து வாழ்ந்துகொண்டிருப்பதுக்கு காரணம் இவ்விரு முயற்சியாளர்களின் அர்ப்பணிப்பு என்பதை உணர்த்துவதாகும்.

தூய யோசப்வாஸ் அவர்கள் 1651 சித்திரை மாதம் 21ம் நாள் கிறிஸ்தோபர் வாஸ் தாய் மரிய டி மிராண்டா தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். கத்தோலிக்க பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்கும் குடும்பமாக, ஏழ்மையான பண்புகளை கொண்ட குடும்பமாக இக்குடும்பம் விளங்கியது. இக்கிறிஸ்தவக் குடும்பம் பக்தியிலும், நேர்மையிலும் பிறரன்புச் சேவையிலும் சிறந்து விளங்கியது. தூய வாழ்வின் வித்தினையும் ஆண்டவனின் அழைப்பையும் நல்ல கிறிஸ்தவக் குடும்பப் பின்னணியில் பெற்ற இவர் தன் குருத்துவ பயிற்சியினை ஆரம்பித்து 1676ம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

தன்னுடைய சொந்த இடத்தில் பணியாற்றிய பின், இலங்கையில் நிலவிய துர்ப்பாக்கிய சூழலையும் ஒல்லாந்தரின் கொடுங்கோன்மையினையும் அறிந்து இலங்கை விசுவாசிகளுக்கு பணியாற்ற இலங்கை வந்தார். மன்னார், யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பல இடங்களுக்கு சென்று பணியாற்றி இலங்கையரின் விசுவாசத்தை திடப்படுத்தினார். மேலும் இவருடன் இணைந்து யோசப் தே யேசு மரியா, மைக்கல் டி மெல்லோ, மனுவேல் எ மிராண்டா, யாக்கோமே கொன்சால்வேஸ் ஆகியோர் இணைந்து பல்வேறு விதமான பணிகளில் ஈடுபடலானார். இலங்கையில் அவர் வாழ்ந்த 24 வருடங்களிலும் அவர் எதிர்கொண்ட சவால்கள், சிறைவாழ்வு, உயிராபத்துக்கள், வஞ்சனையாளர்களின் சூழ்ச்சிகள் சொல்லமுடியாதவை. தன்னுடைய இறுதி நாட்களில் நோயுற்று ஏறக்குறைய ஒரு வருட காலம் அவதியுற்று இறுதியாக 1711ம் ஆண்டு தைமாதம் 16ம் நாள் இறைபதமடைந்தார்.

சுவாமிநாதப்பிள்ளை ஞானப்பிரகாசர் அடிகளார் 1875ம் ஆண்டு ஆவணித்திங்கள் 30ம் நாள் ராஜசிங்கம் சுவாமிநாதப்பிள்ளை தங்கமுத்து தம்பதிகளின் தவப் புதல்வராக யாழ்ப்பாணம், மானிப்பாயில் பிறந்தார். அவர்கள் இருவரும் இந்துக்கள். ஆரம்பத்தில் இவர் வைத்திலிங்கம் என்று அழைக்கப்பட்டார். சிறு வயதிலேயே தன் தந்தையை இழந்தார். அதன் பின் அவருடைய தாயார் யாழ் அச்சுவேலியைச் சேர்ந்த தம்பிமுத்துப்பிள்ளை என்ற கத்தோலிக்கரை மணந்தார். அதற்குப்பின்னர் வைத்திலிங்கம் கத்தோலிக்க மறையில் சேர்ந்து, ஞானப்பிரகாசம் என்ற பெயரைப் பெற்றார். தன்னுடைய ஆரம்ப, இடைநிலை கல்வியினை முடித்துவிட்டு புகையிரதத் திணைக்களத்தில் அரச அலுவலராக பணிபுரிந்தார். இக்காலக்கட்டத்தில் அருட்தந்தை சார்ள்ஸ் கொலின் என்பவரை சந்தித்ததின் வழியாக தம் தொழிலைத் துறந்து அமல மரித் தியாகிகள் சபையில் அங்கத்தவராக 1896ம் ஆண்டு இணைந்து கொண்டார்.

குருத்துவ பயிற்சியின் பின்னர் 1901ம் ஆண்டு மார்கழித் திங்கள் முதலாம் நாள் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அதன் பின்னர் உதவிப் பங்குத்தந்தையாக, பல பங்குகளில் பணி புரிந்தார். அவர் பணி புரிந்த பங்குகளில் நூல் நிலையங்களையும் ஆரம்பித்தார். அத்துடன் அப்போஸ்தலிக்க ஆர்வத்துடன் பணி புரிந்து, விரைவில் 3000க்கு மேற்பட்ட இந்து மக்களை கத்தோலிக்க மறையில் சேர்த்தார்.

அருட்தந்தை ஞானப்பிரகாசர் ஒரு தலைசிறந்த கல்விமான் மட்டுமல்ல, வட மொழியிலும், இந்து மெய்யியலிலும் நன்கு அறிவுள்ளவராக இருந்தார். யாழ்ப்பாண வரலாற்றுக் கல்வியை இவர் மிக விருப்பமாகக் கற்றார். இவர் தமிழ் மொழியை, கடவுள் தனக்குத் தந்த மொழியென ஏற்று மிகவும் நேசித்தார். எனவே தமிழ் மொழி பற்றி பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, தமிழ் மொழி ஒரு பழமை வாய்ந்த மொழி, இதுவே ஆரம்பத்தில் பேசப்பட்டு வந்த மொழி, இதிலிருந்து ஏனைய சகோதர மொழிகள் பல பிறந்துள்ளன என நிரூபிக்கலானார். இப்படியாக இவர் இந்து ஐரோப்பிய மொழிகள் எல்லாம் தமிழ்த்தாயின் பிள்ளைகள் என்ற கருத்தையும் கொண்டிருந்தார். இவர் வரலாறு பற்றியும் ஆர்வம் கொண்டு, பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். இவர் பல நூல்களை சிங்கள,ஆங்கில மொழிகளில் எழுதினார். பல மொழிகளையும் கலாச்சாரத்தையும் அறிந்திருந்ததினால் பன்மொழிப் புலவர் என்று அழைக்கப்பட்டார். இவர் 1947ம் ஆண்டு தைத்திங்கள் 22ம் நாள் இறைபதம் அடைந்தார்.........

தொடரும்..........

அருட் சகோ. எமர்சன் றாகல்
மெய்யியல் பீடம்,தேசிய குருமடம்
கண்டி

# வெற்றியைக் காணவே...

FR.. NC ✠

முன்வைத்த காலை பின்வைக்காது
✠ நல்லதைக் கண்டடைய
✠ மனம் சோர்ந்து பின்வாங்காமல்
✠ நாம் காணும் துயரங்கள்
✠ முன்னேறும் போது வாழ்வில்
✠ பல்கிப் பெருகுமானால்
✠ வெற்றியைக் காண்பது உறுதியே

- ஏழுவரிக்கவிதைகள்
- கவிதை வரிகள் மாறியுள்ளன
- பெரியதாளிலே சரியாக வடிவமையுங்கள்
- **மிகச் சிறிய தாளில் வடிவமைத்தால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது**

1ம் இடம் ~ 500/- ரூபா
2ம் இடம் ~ 300/- ரூபா
3ம் இடம் ~ 200/- ரூபா

முடிவுத்திகதி : 25.08.2017



# புனித நாட்டுப் பயணம்

புனித நாட்டுக்கான பயணம் ஒன்றை 'அலை ஓசை கலைத்தொடர்பகம்' ஏற்பாடு செய்துள்ளது. இரு வழிப்போக்குவரத்துடன் உணவு, தங்குமிடம், பிரயாணக் காப்புறுதி உட்பட ஒருவருக்கான கட்டணம் ரூ 150,000/=
❖ 6 நாட்களுக்கான புனித யாத்திரை


❖ VISITING PLACES
- Church of the Annunciation
- Garden of Gethsemane
- Mount of Beatitudes
- Church of Multiplication
- Baptism
- Boat Ride in the Sea of Galilee
- Church of Agony
- Calvary - Tomb of Jesus
- Jericho/ Sycamore tree
- Nazareth

Church of the Ascension
Last Supper Room
Bethlehem
Church of Nativity
Church of Holy Sepulcher
Way of the Cross
Cana
Western Wall
also including a visit to
Milk Grotto

- 3 ஸ்டார் ஹோட்டல்களில் தங்குமிட வசதி.
- கேபிள் கார் பயணம் ஜெரிக்கோவிலிருந்து ஆண்டவர் சோதிக்கப்பட்ட மலை வரை
- 2017ம் ஆண்டில் புறப்படும் திகதி ஒக்ரோபர் 11
- முதலில் பதிவு செய்யும் 10 பேருக்கு முன்னுரிமை வழங்கப்படும்
- பதிவு செய்ய வேண்டிய இறுதித் திகதி 2017.08.15

இவ் அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இப் புனித யாத்திரையில் இணையுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
அருட்பணி றொஹான் பேர்ணாட்
பணிப்பாளர்
'அலை ஓசை' கலைத்தொடர்பகம்
இல 17 புனித அந்தோனியார் வீதி,
திருகோணமலை.



**ஷேக்ஸ்பியரின் பொன்மொழிகள்**
- ஆயிரம் பேர் இருக்கும் இன்றையஒரு கூட்டத்தில் ஒரே நாணயமுள்ளவன் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுகின்றான்.
- நிலையான முடிவுகள் நம்மை உயர்த்திக் காட்டும். தடுமாற்றம் நம்மைப் பாவச் சூழலில் கூடத் தள்ளி விடும்.

**பெஞ்சமின் ஃபிராங்ளினின் பொன்மொழிகள்**
- இருபதுவயதில் மனம் ஆட்சிசெய்கிறதுமுப்பதவயதில் அறிவுக்கண் விழித்துக் கொள்கிறது. நாற்பதுவயதில் பசித்துணரும் பக்குவத்திற்குதயாராகிறோம். அறுபதில் குழந்தையாகிவிடுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணகத்தில் செய்ய முடியாத ஆனால் மண்ணகத்தில் செய்யக்கூடிய முக்கிய காரியங்கள்

"இறைவார்த்தையை அறிவி வாய்ப்பு கிடைத்தாலும் கிடைக்கா விட்டாலும் இதை செய்வதில் நீ கருத்தாய் இரு"

கிறிஸ்தவர்களாக பிறந்த நாம் ஒவ்வொருவரும் எதிர்நோக்கி இருப்பது இறந்த பின் விண்ணகம் சேர வேண்டும் என்பதாகும். இவ்வாறு விண்ணகத்தினை சேரும் நாம் செய்ய முடியாத காரியம் என்ன என்பது பற்றி சிந்தித்ததுண்டா? அல்லது இப்படி ஒரு கேள்வியையாவது நாம் நினைத்ததுண்டா? என பார்க்கும் போது அனேகமானவர்களின் பதில் "இல்லை" என்பதாகும். அப்படியானால் இந்த கேள்விக்கு பதில் தான் என்ன என நாம் சற்று சிந்திப்போம்.

நான் இந்த கேள்வியைப் பலரிடம் கேட்ட போது எனக்கு கிடைத்த ஒரு பதில் "பாவம்" ஆம் மண்ணகத்தில் பாவம் செய்யலாம். விண்ணகத்தில் பாவத்தைப் பற்றி நினைக்கக் கூட முடியாது. இதனை நாம் ஒரு பதிலாக கொள்வோமேயானால் அது எமக்கு சரியாகத்தான்படும். காரணம் விண்ணகம் என்பது நன்மைகள் மட்டுமே நிறைந்த இடம் அங்கு மகிழ்ச்சி மட்டும் இருக்கும். தூயவர்கள் வாழும் இடத்தில் நாம் பாவத்தை செய்ய முடியாது. ஆனால் மண்ணகத்தில் பாவ வாழ்வு சூழ்ந்துள்ள இவ்வுலகில் பாவம் என்பது நாம் சர்வசாதாரணமாக செய்யக் கூடிய ஒரு விடயமாகும். ஆனால் ஒரு கிறிஸ்தவனாக கிறிஸ்துவின் வழியில் செல்பவனாக இந்த கேள்விக்கான பதிலை நாம் சிந்திக்கும் போது அதற்கு பதில் பாவமாக இருக்காது என்பது உறுதியாக கூறக்கூடியதாக இருக்கும்.

அப்படி இருக்கும் போது என்னதான் இதற்கு பதிலாக அமையும் என பார்ப்பதற்கு நாம் முதலில் நாம் மண்ணகத்திலும் விண்ணகத்திலும் செய்யக்கூடிய விடயங்கள் சிலவற்றை பார்க்க வேண்டும். அதாவது ஒரு உண்மையான கிறிஸ்தவனாக நாம் அவற்றை கண்டிப்பாக மண்ணகத்திலும் விண்ணகத்திலும் செய்ய வேண்டும். அது என்ன என பார்த்தால்,

முதலாவது இறைவனை நம்புதல், நாம் கட்டாயமாக இறைவன் மேல் நம்பிக்கை வைத்திருக்க வேண்டும். அப்படி நம்பா விட்டால் எம்மால் விண்ணகத்திற்கு செல்ல முடியாது. அதே போல கடவுளை ஆராதித்தல், ஆம் நாம் மண்ணகத்தில் வாழும் போது கடவுளை திருப்பலி மற்றும் வழிபாடுகள் ஊடாக இறைவனை ஆராதிக்கின்றோம். விண்ணகத்திலும் இதனை நாம் செய்யலாம். கடவுளின் வார்த்தையை கேட்பதும் அடுத்தவருக்கு எடுத்துரைப்பதும், ஆம் இதனையும் நாம் விண்ணகத்திலும் மண்ணகத்திலும் செய்ய முடியும். அதுமட்டுமல்ல கடவுளை புகழ்தல், பாடுதல், வழிபடுதல் என பலவற்றை நாம் மண்ணுலகிலும் விண்ணுலகிலும் செய்யலாம்.

ஆனால் எம்மால் ஒரு சிறந்த கிறிஸ்தவனாக மண்ணுலகில் செய்யக் கூடிய ஆனால் விண்ணுலகில் செய்ய முடியாத ஒரு விடயம் உள்ளது. அதனை குருக்களாயினும் சரி பாப்பரசர் ஆயினும் சரி யாராலும் விண்ணகத்தில் செய்ய செய்ய முடியாது அது என்ன என பார்த்தால்,

ஒரு கிறிஸ்தவனாக நாம் இயேசுவில் அதாவது நாம் ஒரே கடவுளில் கொண்டுள்ள நம்பிக்கையை இன்னொரு நம்பிக்கையற்றவரிடம் பகிர முடியாது. காரணம் விண்ணகத்தில் உள்ள விண்ணகத்தில் உள்ள அனைவருமே நம்பிக்கை கொண்டவர்களே நம்பிக்கையற்றவர்கள் விண்ணகத்தில் இருக்கமாட்டார்கள். சற்று சிந்தித்து பார்த்தால் எம் வாழ்வின் இறுதி மூச்சை விட்ட பின் எம்மால் இன்னொரு நம்பிக்கையற்றவரோடு பேசமுடியுமா? இல்லை முடியவே முடியாது.

ஆகவே நாம் மண்ணகத்தில் செய்யக் கூடிய ஆனால் விண்ணகத்தில் செய்ய முடியாத ஒரு விடயம் நாம் கடவுள் மீது நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து மீது கொண்டுள்ள நம்பிக்கையை அதாவது விசுவாசத்தை இன்னொரு நம்பிக்கையற்ற மனிதனிடம் அல்லது விசுவாசமற்ற ஒருவரோடு பகிர்ந்து கொள்ள முடியாது என்பதே ஆகும்.

எனவே கிறிஸ்தவர்களாகிய எமக்கு உள்ள ஒரு முக்கியமான கடமை நாம் கிறிஸ்துவில் கொண்டுள்ள நம்பிக்கையை இன்னொரு நம்பிக்கையற்றவரிடம் பகிர வேண்டும். அவ்வாறு நாம் பகிர்வோமானால் அதுவே நாம் கிறிஸ்துவுக்கு அதாவது நம் ஒரே கடவுளுக்கு செய்யும் ஒரு மிக உன்னதமான சேவையாக அமையும்.
எனவே இன்றே விரைவோம்...... பகிர்வோம்........


ஆக்கம் : அ . அஜனைந்த் பெனிடஸ்
தூய யோசேப்வாஸ சிறிய குருமடம்
சாம்பல்தீவு

02ம் பக்கத் தொடர்ச்சி ........

எங்களது உடமைகள் எதையும் காணவில்லை.. ஓடி ஓடித் தேடினோம் .. எங்குமில்லை.. அந்த ஏசியிலும் எங்களுக்கு வியர்க்க தொடங்கியது. அப்போதுதான் ஒப்பிசர் ஒருவர் எங்கள் நால்வரின் லக்கேஜ்களை வைத்துக் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்பாடா...பிழைத்தோம்...காத்திருந்ததுக்கு நன்றி சொல்லிவிட்டு பெட்டிகளை தள்ளிக் கொண்டு வெளியே வந்தோம்... மீண்டும் பதட்டம் ஜோஸ் எங்கே... அவர்தான் எங்களை NBCLC க்கு அழைத்துச் செல்ல வேண்டியவர். நிறையப் பேர் பெயர்கள் எழுதிய அட்டைகளுடன் நின்றுகொண்டிருந்தனர்.. நித்திரை மயக்கம் .. களைப்பு ... தேடினோம். பாக்கிய நாதன் ஜோஸ் அவர்களைக் கண்டுபிடித்தார்.


ஜோஸ்... அருமையான மனிதர்.. மலையாளத்தவர்.. நீண்ட காலமாக பெங்களூரில் வசிக்கின்றார். இந்திய மத்திய அரசின் தபால் திணைக்களத்தில் சீப் எக்கவுண்டனாகப் பணி புரிகிறார். சிம்பிளான சுபாவம். டிரைவர் ரவி மூன்று சீற்றுள்ள நீண்ட கார் .. அவரே சொந்தக் காரர். தமிழும் மலையாளமும் கலந்து அவர்கள் எங்களுடன் உரையாடியது சுவாரசுஷ்யமாக இருந்தது.நாற்பத்தைந்து நிமிடம் ஓடி சிரமப் பட்டு இடத்தைத் தேடி ஐந்தரை மணிக்கு NBCLC யை அடைந்தோம்.எங்களுக்கென ஒதுக்கப்பட்ட அறையை நானும் பாக்கிய நாதனும் அயர்ந்து கட்டிலில் விழுந்தது தான் தாமதம் .. அயர்ந்த தூக்கம் . ஏழரை மணிக்கு விழித்தோம். எட்டு மணிக்கு தயாராகி வெளியே வந்த போது தமிழ் நாட்டு தமிழ் காதுகளில் ஒலித்தது. வாங்க சார்... நீங்க சிறி லங்காவா?... எப்போ வந்தீங்க... வார் எல்லாம் முடிஞ்சிருச்சா?... பிரபாகரன் இருக்காரா இல்லையா? .. உங்களை வோர் பாதிச்சிருக்கா... என பல கேள்விகள் ஒரே தடவையில் பலரும் நாங்களும் சுருக்கமாக இலங்கைத் தமிழில் பதிலளிக்க முயற்சித்தோம்.. அவர்களுக்கு எமது தமிழ் சரியாக புரியவில்லை. காலையுணவு உண்ண சாப்பாட்டறைக்குச் சென்றோம்...சாப்பாட்டறையே ஒரு தியான மண்டபம் மாதிரி இருந்தது. ஒரே நிசப்தம்.. வெறும் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ளவேயில்லை. இவ்விடத்தில் சாப்பாட்டறையின் நாகரீகமான ஒழுங்கைப் பற்றி சொல்லித்தான் ஆக வேண்டும்.



தொடரும்.........................

# தூய யோசேப் வாஸ் ஆண்டு

- ❖ யோசேப் வாஸ்முனிவரின் இலங்கைக்கான முதல் பயணம் யாழ்ப்பாணத்தை இலக்காகக் கொண்டிருந்தது. ஆனால் கடல் பயணத்தின் போது ஏற்பட்ட புயற்காற்றினால் கப்பல் மன்னாரை வந்தடைந்தது.
- ❖ பலநாட்கள் கடலில். உணவின்றி, நீரின்றி சோர்வுற்றநிலையில் அனைவரும். இதனால் நன்மைகளும் கிடைத்தன.
- ❖ 'வர உரிமையில்லாத குடியேறிகள்' என ஒல்லாந்தர் சந்தேகிக்கவில்லை. மன்னாரிலிருந்து யாழ் சென்றதால் பரிசோதனைக் கெடுபிடிகள் இவர்களுக்கு இருக்கவில்லை.
- ❖ யாழில் வாரக்கணக்கில் போதிய உணவில்லாமல் துன்புற்றார். இதன் விளைவாக வாந்திபேதி நோய்க்கு யோசேப் வாஸ் ஆளானார்.




- ❖ கத்தோலிக்கரிடையேமறுமலர்ச்சிஏற்படத் தொடங்கியது. ஒல்லாந்தரும் சந்தேகம் கொண்டனர்.
- ❖ 1689ல் கத்தோலிக்ககுருவானவர் பற்றித் தகவல் தருவோருக்குசன்மானம் கிடைக்குமெனஹென்றிக் அடரியன் வான் எனும் ஒல்லாந்தஆளுநன் அறிவித்தான்.
- ❖ தகவல்கள் கிடைத்தன. கிறிஸ்மஸ் திருப்பலிகள் 3 இடங்களிலநடைபெறும்.
- ❖ போர் வீரர்கள் 3 இடங்களிலும் ஆயத்தமாக இருந்தனர்.
- ❖ பலர் பிடிபட்டனர். பெண்களும் பிள்ளைகளும் எச்சரிக்கப்பட்டுவிடுபட்டனர். யோசேப் வாஸ் பிடிபடவில்லை.

- ❖ இவரையும் இவரது ஊழியனாகிய யோனையும் பார்த்த ஒரு பெண்மணி இரக்கம் கொண்டு இவர்களுக்கு உணவு கொடுத்துவந்தார்.
- ❖ யாழில் பிச்சைக்காரரைப் போல நடமாடினார்கள். இதனால் ஒல்லாந்தரும் இவர்களில் சந்தேகம் கொள்ளவில்லை.
- ❖ பட்டினி, நோய், பிச்சையெடுத்தல் போன்ற அனுபவங்கள் பிற்காலத்தில் மேலும் பல பணிகள் செய்ய உதவியாக இருக்கும்.
- ❖ கழுத்தில் செபமாலை அணிந்து யோசேப் வாஸ் வீடு வீடாக பிச்சையெடுக்கச் சென்றார். கத்தோலிக்கர் என உறுதி செய்த பின் இவர் தன்னை ஓர் குருவானவர் என வெளிப்படுத்தினார். செய்தி பரவியது இவரது பாதுகாப்பையும் மக்கள் பொறுப்பேற்றனர். சில்லாலை பாதுகாப்பான இடமாக இருந்தது
- ❖ இரண்டு வருடங்கள் மறைமுகமாக கத்தோலிக்க சமூகங்களைத் தரிசித்து திருப்பலி நிறைவேற்றிவந்தனர்.

- ❖ சமூகத்தின் தலைவர்கள் 8 ஆண்கள் கடுமையாக தண்டிக்கப்பட்டனர். டொன் பேட்றோ என்பவர் கத்தோலிக்கராக இருந்து பின் கல்வினிசத்தைத் தழுவி பின் யோசேப் வாஸ் அடிகளின் பணியால் கவரப்பட்டு மீண்டும் கத்தோலிக்கரானவர். இவரை ஒல்லாந்தர் மிகவும் துன்புறுத்திக் கொன்றார்கள்.
- ❖ யாழ் கத்தோலிக்கரின் வேதசாட்சியமரணம் இவர்களதுவிசுவாசமுதிர்ச்சியைக் காட்டுகின்றது.
- ❖ 1689 கிறிஸ்மஸ் தினம் நடைபெற்ற இச் சம்பவத்தால் யோசேப் வாஸ் அடிகளின் முதற்கட்டப் பணி யாழில் முடிவுற்றது.
- ❖ ஏனைய ஊர்களுக்கும் சென்றுபோதிக்கஅவர் வன்னிநோக்கிப் புறப்பட்டார்.

## யாழ்ப்பாணத்தில் யோசேப் வாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய யோசேப் வாஸ்

**எமது நாட்டின் திருத்தூதரான தூய யோசேப்வாஸ் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதவை இன்று எம் நாட்டில் கத்தோலிக்க திருச்சபை நிலைத்து நிற்கின்றது என்றால் அதற்கு காரணம் தூய யோசேப் வாஸ் ஆவார். எனவே அவர் பற்றியும் அவரது பணி பற்றியும் அறிந்துகொள்ள வேண்டியது நமது கடமையாகும். இம்மாதம் அவரது வாழ்வில் நடந்த சில புதுமைகள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வோம்.**

### 1. தூய யோசேப் வாசின் பிறப்பை ஒட்டிய புதுமைகள்


தூய யோசேப் வாஸ் பிறந்த போது நடந்த நிகழ்வுகளை அவரது தந்தை கிறிஸ்தோபர் வாஸ் தனது நாட்குறிப்பேட்டில் குறிப்பிட்டுள்ளார். **“21 ஏப்ரல் 1651 இல் எனக்கு ஒரு மகன் பிறந்தார். பிறந்து எட்டாம் நாளில் யோசேப் எனும் பெயருடன் அவருக்குத் திருமுழுக்கு அளிக்கப்பட்டது. ஒருநாள் அவர் சாதனை படைக்கும் மனிதராவார்.”** அவர் பிறந்த போது பகலில் வானில் பிரகாசமான ஒரு வெளிச்சம் தென்பட்டது எனவும் குறிப்பிடப்படுகின்றது.

### 2. தூய யோசேப் வாஸ் சிறுவனாக இருந்த போது



அதிகாலையில் சிறுவன் யோசேப் வாஸ் திருப்பலிக்குச் செல்லும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். அவர் அவரது வயதுக்குரிய சிறுவர்களின் தோற்றத்தை விடச் சிறியவராக இருந்ததால் அதிகாலையில் ஆலயக் கதவைத் திறப்பது கடினமானதாக இருந்தது. செபத்தில் தன்னை இறைவனோடு இணைத்துக் கொண்ட இவர் ஆலயத்துக்குச் செல்லும் போது பல தடவைகள் ஆலயக் கதவு இவருக்காகத் தானாகத் திறந்ததைப் பலர் அவதானித்திருக்கிறார்கள். அவருக்காக வானதூதர் கதவைத் திறந்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

### 3. இலங்கைக்கான பயணம்



தூய யோசேப் வாஸ் தூத்துக்குடியிலிருந்து கப்பலில் கொழும்பு செல்வதற்கு எண்ணியிருந்தார். ஆனாலும் தூத்துக்குடியிலிருந்த இயேசு சபைக் குருக்களின் அறிவுரையின்படி அத்திட்டம் யாழ்ப்பாணம் செல்லும் பயணமாக மாறியது. படகில் யாழ்ப்பாணம் நோக்கி ஆரம்பித்த பயணம் இறைவனுடைய திட்டத்தால் மன்னார் கரையில் இறங்கக் கூடியதாக மாற்றியமைக்கப்பட்டது. இதனால் ஹென்றிக் எட்றியன் வன் றீட் எனும் கடும்போக்குடைய யாழ்ப்பாண ஒல்லாந்த ஆளுநரின் பார்வையில் சிக்காமல் பாதுகாப்பாக இலங்கையில் கத்தோலிக்கர் அதிகமாக வாழும் மன்னாரில் தரையிறங்க முடிந்தது. இதனாலேயே தூய யோசேப் வாசும், யோனும் தமது பணியை எவ்வித பிரச்சினைகளும் இல்லாமல் ஆரம்பிக்கக் கூடியதாக இருந்தது.

### 4. மன்னார்

மன்னாரில் சவுத் பார் (South Bar) எனும் இடத்தில் தூய யோசேப் வாஸ் கடல் பயணத்தால் பட்டினியோடு பாதி உயிரை இழந்தவராகத் தரையிறங்கினார். விரைவில் வயிற்றோட்டமும், நீரிழப்பும் இவரைப் பாதித்ததால், தொற்று நோய்களுக்கான மருந்து ஏதும் இல்லாத நிலையில் இறப்பதற்காக அருகில் இருந்த சிறு காட்டுப்பகுதியில் கைவிடப்பட்டார். எனினும் இறை பராமரிப்பினால் காட்டுக்கு விறகு சேர்க்க வந்த ஒரு பெண் மூலமாக உணவு வழங்கப்பட்டு அவரது உயிர் காப்பாற்றப்பட்டது. இப்பெண் இவர்களைக் கவனிக்காது விட்டிருந்தால் தூய யோசேப் வாஸ் எப்பொழுதோ உயிர் துறந்திருப்பார்.



### 5. நத்தார் திருப்பலி



யாழ்ப்பாணத்தின் சில்லாலைக் கிராமத்தில் தூய யோசேப் வாஸ் நத்தார் திருப்பலியை மூன்று இடங்களில் நிறைவேற்றத் தீர்மானித்திருந்தார். அவ்வேளையில் அவரைக் காட்டிக் கொடுக்க அவ்வூரைச் சேர்ந்த ஒருவன் முன்வந்தான். (இன்றும் காட்டிக் கொடுத்தோர் பரம்பரை என இவனது வழிமரபினர் அழைக்கப்படுகின்றார்). 1689 இல் சில்லாலையின் நாற்சார் வீடு ஒன்றில் அடிகளார் நத்தார் திருப்பலி நிறைவேற்றும் போது அவ்வீடும், ஏனைய இரண்டு வீடுகளும் ஒல்லாந்தருடைய மூன்று படையணிகளால் சுற்றி வளைக்கப்பட்டன. எனினும் எங்குமே அடிகளாரைக் காண முடியவில்லை. அவர் எவ்வாறு தப்பினார் என்பது விளக்கத்துக்கு அப்பாற்பட்ட புதுமையாகக் கருதப்படுகின்றது.



### 6. மகாவலி ஆற்றைக் கடத்தல்



தூய யோசேப் வாஸ் கண்டி நகரில் சிறை வைக்கப்பட்ட போது அவர் மலையகத்தின் தரைத்தோற்றத்தையும், கலாசாரம், வாழ்க்கை முறையையும் கற்றுக் கொண்டார். கண்டி நகரிலிருந்து வெளியேறிச் செல்ல ஐந்து நுழைவாயில்கள் காணப்பட்டன. தன்னுடைய வாழ்நாளில் எத்தனையோ தடவைகள் அனுமதி பெற்று இவற்றினூடாக அடிகளார் பயணம் செய்திருக்கிறார். எனினும் கத்தோலிக்கருக்கு அவசர நிலைகளில் பணிபுரிய அனுமதி பெறாமலேயே எட்டுத் தடவைகள் இந்த ஆற்று நுழைவாயில்களைத் தாம் கடந்து சென்றதாகக் கோவாவுக்கு அனுப்பிய கடிதங்களில் அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான பயணங்களில் அவர் காவலர்களின் கண்களுக்குத் தென்படவில்லை. போகும் போது மட்டுமல்லாமல், வரும்போதும் யாருடைய கண்களுக்கும் தென்படாமல் இறைவன் அவரை அவரது சிறை வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்.

### 7. தெதுறு ஓயாவைக் கடத்தல்



அடிகளாரின் பயணப் பாதையில் ஒரு முறை தெதுறு ஓயாவைக் கடக்க வேண்டியேற்பட்டது. எனினும் ஆறு அவ்வேளையில் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. முஸ்லிம் வியாபாரிகளும், ஏனைய பயணிகளும் ஆற்றைக் கடக்க முடியாது அந்தரித்துக் கொண்டிருந்தனர். அடிகளார் செபித்து, ஆற்றில் இறங்க முற்பட்ட போது ஏனையோர் கேலி செய்தனர். எனினும் அவர் ஆற்றிலே இறங்கி எதவித தீங்குமின்றி ஆற்றைக் கடக்க தொடங்கினார். ஏனையோரையும் எதுவித தீங்குமின்றி மறுகரைக்கு அழைத்துச் சென்றார்.

### 8. கண்டியில் மழை



நீண்ட காலமாகக் கண்டி இராச்சியம் மழை இல்லாமல் துன்புற்றது. ஏனைய மதங்களின் சடங்குகள் மூலம் மழையை வருவிக்க முடியவில்லை. எனவே அடிகளின் தூய வாழ்வை அறிந்திருந்த அரசன் மழைக்காகச் செபிக்குமாறு அடிகளாரை வேண்டினார். எனவே ஒரு பீடம் அமைக்கப்பட்டு அதன்மேல் சிலுவை வைக்கப்பட்டது. அடிகளார் முழங்காலில் இருந்து செபிக்கத் தொடங்கினார். வானம் இருண்டு பெருமழை பெய்யத் தொடங்கியது. எனினும் அடிகளார் செபித்த இடம் மட்டும் நனையவில்லை.

### 9. கண்டியில் வைசூரி நோய்

1697 இன் மத்திய காலப்பகுதியில் கொழும்பில் தனது இரகசியப் பணியை முடித்துக் கொண்டு அடிகளார் கண்டிக்குத் திரும்பிய போது, அங்கு சின்னமுத்து எனும் கொடிய தொற்றுநோய் பரவிக் கொண்டிருந்தது. இந்நோய்க்கு மருந்து இல்லாததால் அரசனும், பிரதானிகளும், மக்களும் நகரிலிருந்து வெளியேறிச் சென்றனர். நோயாளிகள் கவனிப்பாரற்று விடப்பட்டனர். அடிகளும், அருட்பணி யோசேப் கர்வால்ஹோவும், யோனும் நோயாளரைப் பராமரிக்கத் தொடங்கினர். சிறிய வைத்தியசாலை ஒன்று அமைக்கப்பட்டு, நோயாளிகள் அங்கு கொண்டுவரப்பட்டுப் பராமரிக்கப்பட்டனர். உணவும், நீரும், மருந்தும் கொடுக்கப்பட்டன. மரணத்தறுவாயில் இருந்தோருக்கு இறுதி ஆசீர்வாதம் வழங்கப்பட்டது. இறந்த கத்தோலிக்கர், கத்தோலிக்க முறைப்படியும், ஏனையோர் கௌரவமான முறையிலும் அடக்கம் செய்யப்பட்டனர். கத்தோலிக்கரை ஒன்றுதிரட்டி அனைத்து தேவைகளையும் நிறைவு செய்ய அடிகளார் பொருட்களைச் சேகரிக்கத் தொடங்கினார். பலர் தமது சொத்துக்களைக் கூட இதற்காக வழங்கினர். இன, மத பேதமின்றி மும்முரமாக இப்பணி இடம்பெற்றது. நோயிலிருந்து குணம் பெற்றோர் விசுவாசத்தோடு கிறிஸ்தவர்களாக மாறித் திருமுழுக்குப் பெற்றனர். நோய் முற்றாக நீங்கிய பின் திரும்பி வந்த அரசன் அடிகளாரின் பணிகளைப் போற்றினர். எனினும் பணியாளர் எவரும் இந்நோயினால் பாதிக்கப்படவில்லை.

### 10. ஒறத்தோரியன் சபை

தூய யோசேப் வாஸ் இலங்கைப் பணிக்காகத் தம்மை ஆயத்தம் செய்த போது நீண்ட காலம் அதற்காகச் செபித்தார். தனக்குப் பின் அப்பணியைத் தொடரப் பெருமளவு குருக்கள் தேவையென்பதை அவர் உணர்ந்திருந்தார். எனவே இறையருளால் அவர் கோவா மறைமாவட்டத்தில் பல குருக்களை இணைத்து ஒறத்தோரின் சபையை உருவாக்கினார். இச்சபையின் குருக்கள் ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகள் இலங்கைக் கத்தோலிக்கருக்குப் பணிபுரிந்தனர். இச்சபையானது ஐரோப்பிய மறைபணியாளர்களின் வருகை வரை இலங்கையில் சிறப்பாக இயங்கியது. இப்பணி முடிவடைந்ததும் சிறிது சிறிதாக இச்சபை இல்லாது போனது. எனவே இக்கட்டான காலகட்டத்தில் இறைவன் தூய யோசேப் வாஸ் மூலம் செய்த ஒரு புதுமையாக இச்சபை கணிக்கப்படுகின்றது.

### 13. புனிதரின் வாழ்க்கை

தனித்தனி சம்பவங்களாகப் பல புதுமைகள் புனிதரின் வாழ்வில் இடம்பெற்றிருந்தாலும், மிகப் பெரிய புதமையாகக் கணிக்கப்படுவது புனிதரின் வாழ்க்கையாகும். நம்ப முடியாத துன்ப துயரங்களினூடாக, அவற்றைத் தாங்கித் தனி ஒரு குருவாக இலங்கை முழுவதற்கும் பத்து வருடங்களும், ஏனைய குருக்களுடன் பதினான்கு வருடங்களும் உன்னத பணிபுரிந்த புனிதரின் வாழ்வு இலங்கைத் திருச்சபையின் வரலாற்றில் ஒரு உன்னதமான புதுமையாகும்.



- ஒருவன் தன் வாழ்நாளில் செய்ய முடியாததை, மரணத்தறுவாயில் செய்யமுடியாது.
- இலங்கையில் பணிபுரிந்து முதன் முதலாக இறந்த ஒறத்தோரியன் சபைக்குரு அருட்பணி யோசேப் கர்வால்ஹோ ஆவார். இவர் தூய யேசேப் வாசின் சகோதரியின் மகனாவார். அவரது கல்லறை இன்று வரை அடையாளம் காணப்படவில்லை.
- இலங்கையில் பணிபுரிந்து இரண்டாவதாக இறந்த ஒறத்தோரியன் சபைக்குரு அருட்பணி மைக்கேல் டி மெல்லோ ஆவார். இவரது கல்லறையே இலங்கையின் மிகப்பழமையான ஒறத்தோரியன் சபை குருவினரின் கல்லறையாகும்.
- தூய யேசேப் வாஸ் கண்டி நகரில் அரசனின் பார்வைக்குத் தெரியக் கூடிய இடத்தில் புதைக்கப்பட்டார். எனினும் இன்று வரை புனிதரின் கல்லறை அடையாளம் காணப்படவில்லை.
- ஒறத்தோரியன் சபைக் குருக்களின் பல கல்லறைகள் போலவத்தை, பரப்பாங் கண்டல் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

**இலங்கையின் திருத்தூதரான தூய யோசேப் வாஸ் முனிவரே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்!**

**அருட்பணி. எஸ். ஆர். ஜெயரெட்ணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவாக்கினர் அழைப்பு

இறைவாக்கு இயக்கத்தின் தொடக்க நிலையில் சில மனிதர்கள் இறைவாக்கு உரைப்பதைத் தங்கள் தொழிலாக கொண்டிருந்தார்கள். சில பயிற்சிகளைப் பெற்ற பின்னர் திருத்தலம், அரசவை ஆகியவற்றைச் சார்ந்து பணிசெய்தார்கள். மன்னர்களின் ஆதரவையும் மக்களின் பொருளுதவியையும் நம்பி வாழ்ந்தார்கள். இதனால் மன்னர்களை இடித்துரைப்பதற்குப் பதிலாக அவர்களுக்குத் துதி பாடினார்கள். மக்களின் நேர்மையற்ற செயற்பாடுகளைக் கண்டித்து திருத்துவதற்குப் பதிலாக அவற்றைக் கண்டு கொள்ளாமல் இருந்துவிட்டார்கள்.

இவ்வாறு பல முறைகேடுகள் நடந்து வந்த காலகட்டத்தில் சில இறையடியார்கள் எவ்வித அமைப்புக்களையும் சாராது இறைத் திருவுளத்தின் படி மட்டும் செயல்பட்டு, இறைவாக்கைத் துணிவோடு அறிவிக்கத் தலைப்பட்டார்கள். **சுதந்திர இறைவாக்கினர்** என்று அழைக்கப்பெற்ற இவர்கள் கடவுளிடமிருந்து நேரடியான, சிறப்பான, தனிப்பட்ட அழைப்பைத் தாங்கள் பெற்றிருந்ததாக உணரத் தொடங்கினார்கள்.

பண்டைய இஸ்ரயேலில் குருக்கள், அரசர்கள் ஆகியோர் ஏற்படுத்தப்பட்டார்கள். இறைவாக்கினர்களோ இறைவனால் அழைக்கப்பெற்றார்கள். குருத்துவம் குடும்ப வழிச்சொத்து ஆனது. லேவி குலத்தைச் சார்ந்தவர்கள்; அதுவும் ஆரோன் குடும்பத்தைச் சேர்ந்த ஆண்கள் மட்டுமே குருக்கள் ஆக முடியும். அவர்களுக்குச் சில பண்புகளும் உடற்கூறுகளும் தேவைப்பட்டன. (லேவி : 21). அரசும் காலப் போக்கில் இந்த நிலைக்கு உள்ளானது.

சுதந்திர இறைவாக்கினர்களைப் பொறுத்தமட்டில் இத்தகைய வரைமுறைகள் அல்லது தகுதிகள் தேவைப்படவில்லை. அவர்களுள் பெரும்பாலானோர் ஆண்களே என்றாலும் பெண் இறைவாக்கினர்களும் இருந்தார்கள். பன்னிரு குலங்களினின்றும் பல்வேறு குடும்பங்களினின்றும் பலதரப்பட்ட சமூகப் பின்னனியிலிருந்தும் அவர்கள் இறைவாக்கு உரைக்க அழைக்கப்பெற்றார்கள். வயது வரம்புக்கு அப்பாற்பட்ட நிலையில் வாழ்வின் பல்வேறு கட்டங்களிலும் அழைக்கப்பெற்ற அவர்கள் வெவ்வேறு பணிகளைச் செய்தவர்கள்.

இறைவாக்கினருடைய வாழ்வில் அழைத்தல் முக்கியமானதோர் இடத்தை வகித்தாலும் பலருடைய அழைத்தல் பற்றிய அனுபவம் விவிலியத்தில் பதிவாகவில்லை. சிலருடைய அழைத்தல் பற்றி மறைமுகக் குறிப்புக்களே உள்ளன. கடவுள் கட்டளையிட இறைவாக்கினர் அதன்படி செயல்படுகிறார் என்னும் எளிய அமைப்புக்குள் அவர்களது அழைத்தல் நிகழ்ச்சி மிகச் சுருக்கமாக விளக்கப்படுகிறது. (ஆமோ 7: 14~15, ஓசே 1: 2~3). அதே நேரத்தில் சாமுவேல் (1சாமு 3: 1~18), எசாயா (6: 1~13), எரேமியா (1: 1~19), எசேக்கியேல் (1: 1~3 : 15) முதலியோருடைய அழைத்தல் விரிவாக எடுத்துரைக்கப்படுகின்றது.

நன்றி ~ விவிலிய விருந்து

# குடும்ப அப்போஸ்தலத்துவம்



**அன்பு நிறைந்த குடும்பம்**

கடவுளின் அவதாரம் அன்பு. அன்பின் பிறப்பிடம் கடவுள். அன்புதான் அனைத்திலும் சிறந்தது. அன்புதான் அனைத்திற்கும் அடித்தளம். கடவுள் மீதுகொண்டுள்ள அன்புதான் ஒவ்வொரு குடும்பத்தின் அடித்தளமாக அமைய வேண்டும். இறைவனின் அன்பு நிபந்தனையற்ற அன்பு. திருத்தந்தை 16ம் பெனடிக்ட் "அன்பு செய்யும் பணியே மனிதனை இறைவனின் உண்மையான சாயலாக்குகிறது. மனிதன் எந்த அளவுக்கு அன்பு செய்கின்றவனாக மாறுகின்றானோ, அந்த அளவுக்கு இறைவனைப் போல ஆகின்றான்" என்று அன்பே கடவுள் என்ற சுற்றுமடலில் கூறுகிறார்.

நாம் ஒவ்வொருவரும் இறைவனையும், மனிதர்களையும் அன்பு செய்யவே அழைக்கப்பட்டுள்ளோம். அன்பைப் புறக்கணிப்பது இறைவனையும், மனிதனையும் புறக்கணிப்பதற்குச் சமம். எனவே கடவுளின் அன்பை ஒவ்வொரு குடும்பமும் ஏற்றுக் கொண்டு வாழவேண்டும். எல்லாவற்றையும் விடச் சிறந்த முறையில் இத்தகைய அன்பு செயல்படுத்த வேண்டும். அன்பினால் ஒவ்வொருவரும் தம்முடன் வாழ்கின்றவர்களின் தேவையை உணரவேண்டும்.

அப்போதுதங்களுக்குத் தேவையானது அவர்களிடம் இருக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்ள முடியும். எடுத்துக்காட்டாக எல்லாப் பொருள்களையும் நமக்கு நாமே தயாரிப்பதில்லை. பிறரைச் சார்ந்துதான் வாழ்கின்றோம். அவர்களின் இருத்தலும் நமக்கு அவசியம். இதைப் புரிந்து ஏற்றுக்கொண்டால் அன்பு அமைதியை உருவாக்கும்.

**அன்பின் சமூகம்:~**

அன்பார்ந்தவர்களே, ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துவோமாக! ஏனெனில் அன்பு கடவுளிடமிருந்து வருகிறது. அன்பு செலுத்தும் அனைவரும் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள் அவர்கள் கடவுளை அறிந்துள்ளார்கள். அன்பில்லாதோர் கடவுளை அறிந்து கொள்ளவில்லை. ஏனெனில் கடவுள் அன்பாய் இருக்கிறார். (1யோவா4:7~8) கடவுள் மனிதனை ஆணும் பெண்ணுமாக இணைத்துஅன்பில் வாழதிருமணம் என்னும் அருளடையாளத்தை ஏற்படுத்தினார். குடும்பத்தில் கணவன், மனைவி, பிள்ளைகளுக்கிடையே அன்புப் பரிமாற்றம் இருந்தால் அந்தக் குடும்பம் ஒரு கோவிலாகமாறும். குடும்பம் என்னும் கோவிலில் கடவுள் அவர்களோடு தங்கியிருப்பார். இத்தகைய குடும்பத்தை 2ம் வத்திக்கான் சங்கம் "அன்பின் சமூகம்" என்று அழைக்கிறது.

நன்றி ~ இறைகுடும்பம் நிறைகுடும்பம்



# தூய மத்தேயு ஆண்டு



## மத்தேயு நற்செய்தியில் செபம்

❖ **பரலோகமந்திரம் (6:9 –15)**

இது மலைப்பொழிவின் மையமாக உள்ளது.
மலைப்பொழிவு (5~7) நேரிய வாழ்வு பற்றிய இயேசுவின் போதனைகளாகும்.
இயேசு தந்த பரலோக மந்திரம் சுருக்கமானது நேரடியானது, இலகுவானது, உணர்வு பூர்வமானது. இது ஒரே கடவுளை நோக்கியதாக உள்ளது. இறைவனை நோக்கியதாகவும் அடுத்தவரை நோக்கியதாகவும் உள்ளது.

❖ **மன்னிப்பு**

மனித வாழ்விற்கு மன்னிப்பு மிக முக்கியம் என்பதை மத்தேயு காட்டுகின்றார். (6:15, 18: 22, 35) "ஆண்டவரே, ஆண்டவரே" என்று அழைப்பது மட்டும் செபமல்ல.
இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவது மிக முக்கியம் (7:21, 25:11).

❖ **கெத்சமெனியில் இயேசு:**

சிலுவையை ஏற்றுக்கொள்ளு முன் இயேசு இறைத் தந்தையின் விருப்பத்தை அறிய போராடுகின்றார். (26: 36 – 46).




❖ **மூவகை சமூக செபம்:**

1.கொராசின், கப்பர்நகூம் நகர்களை சபித்த இயேசு தந்தையை நோக்கி செபித்தார். (11: 25 – 27) இச்செபம் இயேசுவிற்கும் இறைவனுக்குமிடையே உள்ள நெருக்கத்தைக் காட்டுகின்றது.
சிறுபிள்ளைகள் மேல் கைகளைவைத்துசெபித்தார் (19:13 – 15)
துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டும்படி இயேசு கூறினார் (5:44).

2. **இறுதி இராவுணவு**
அப்பத்தையும் இரசத்தையும் எடுத்து, செபித்து புதிய பாஸ்காவை ஏற்படுத்தினார் (26: 26 – 30). பாவப்பட்ட மனுக்குலம் மீட்படைய தன்னை பலியாக்கினார் (26:28).

3. **ஆலயம் செபிக்கும் இடமாக......**
என் இல்லம் இறைவேண்டலின் வீடு
இயேசுவை எதிர்ப்பவர்கள் இறைவனின் சட்டத்தை சரியாகப் புரியவேண்டும்.



❖ **தனித்தும் பொதுவிலும் செபம்:**

- அடுத்தவர் புகழ வேண்டுமென செபிப்பது வெளிவேடம் (6:5, 23:6).
- செபத்தில் எனக்கும் இறைவனுக்குமிடையே உள்ள உறவே முக்கியம் (6:4, 6:18).
- செபத்தோடு இணைந்துதர்மம் செய்தலும் நோன்பு இருத்தலும் அவசியம். ( 6: 1 – 4, 16 – 18).
- செபம், தர்மம், நோன்பு ~ இவை மூன்றும் நூற்றாண்டுகளாக



❖ **செபமும் பிரசன்னமும்:**

- உலக முடிவுரை உங்களோடு இருப்பேன் (28:20)
- "எங்கே இருவர் அல்லது மூவர் என்பெயரால் கூடியிருக்கிறீர்களோ...."(18:20)
- எமக்காக செபிக்க இயேசு கூறினார் (24:20)
- உள்ளத்திலிருந்து எழும் உண்மை செபத்தை கடவுள் கேட்பார் (21:22).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 23
## 1 கொரிந்தியர் அதி 01 – 04 வரை
## பாராட்டுக்குரியவர்கள் :-

01. ச.ஏஞ்சல் - பாலையூற்று
02. லி.அன்றியா ஸ்டெபனி - பாலையூற்று
03. ஆ.கொரேரா ஸெனிபர் - மூதூர்
04. ஆர். எமில்ராஜ் - செல்வநாயகபுரம்
05. சரோனா ஆர்.எப் - பேராலயப்பங்கு
06. தே.தேவஜக்ஷனா - பள்ளத்தோட்டம்
07. மை. றிஷேலி - குவாடலூப்பே
08. பி.பிரசாத் - குவாடலூப்பே
09. இ.கேமியன் கிளிற்றஸ் - நிலாவெளி
10. சு.கௌசல்யா - பாலையூற்று
11. ஆர். அப்சரா நிவேதி - நிலாவெளி
12. கிறிஸ்டி ஜெனிக்ஷயா - இலிங்கநகர்
13. இ.திலுக்சிக்கா - பாலையூற்று
14. எஸ். அனோஜா - நிலாவெளி
15 T.ஜெரோம் - தூய ஜோசேப்வாஸ் சிறிய குருமடம்
16. எஸ். ஆரோன் - குவாடலூப்பே
17. தேனுகி கிரிதரன் - பேராலயம்
18. றிஷா பிரதீஸ் லூக் - குவாடலூப்பே
19. அ. மேரி டிலாணி - உவர்மலை
20. சரவணபவன் தரோன்ஷன் - செல்வநாயகபுரம்
21. ஆன் வஜிரா R.F. - பேராலயம்
22. குணசேகரன் டிலுஷன் - பாலையூற்று
23.P. ஜெக்குலின் - கன்னியா (02)
24. அ. டிறோன் - உவர்மலை
25. திரு.யூட் விமலதாஸ் - பேராலயம்
26. தே.சமில்டன் - நிலாவெளி
27. சு.சுவேக்கா - பாலையூற்று
28. டொ. கிருஷாந்தன் - மூதூர் (சகாயபுரம்)
29. M.C. சுனேஷ் மெலன் - மூதூர்
30. V. சொய்ஸ் கிளிண்டன் - நிலாவெளி
31. S. கயானி - அன்புவழிபுரம்
32. A.வலண்டினா - பாலையூற்று
33. D. சுஜீவன் - தூய ஜோசேப்வாஸ் சிறிய குருமடம்
34. தனராஜா மேஷாக் - அன்புவழிபுரம்
35. P. சனாலி பெர்னான்டோ - மூதூர்
36. டானியலா R.I. - பேராலயம்
37. இ. ஜொனத்தன் - பேராலயம்
38. நேமிநாதன் சதுஷன் - கும்புறுபிட்டி
39. வேஜின் டி குருஸ் - அன்புவழிபுரம்
40. அ.பொனிபஸ் - தூய ஜோசேப்வாஸ் சிறிய குருமடம்

## பேச்சின் சிறப்பு

**கோபமாய் பேசினால், குணத்தை இழப்பாய்**
**வேகமாய் பேசினால், அர்த்தத்தை இழப்பாய்**
**வெட்டியாய் பேசினால், வேகத்தை இழப்பாய்**
**அதிகமாக பேசினால், அமைதியை இழப்பாய்**
**ஆணவமாய் பேசினால், அக்பை இழப்பாய்**
**சிந்தித்து பேசினால், சிறப்போடு வாழ்வாய்**

**ஆக்கம் : ர.ஷதுர்சன், செல்வநாயகபுரம்.**

### அரிஸ்டாட்டிலின் பொன்மொழிகள்

- கடினமான உழைப்பிற்கு ஆதாயம் என்ற தூண்டுதல் தேவைப்படுகின்றது. ஆதாயம் இல்லையென்றால் அது எப்பேர்ப்பட்ட உழைப்பாயினும் வீண்தான்.
- பேசுவதன் மூலமே மனிதன் சமூகத்தை உருவாக்கினான். எனவே சமுதாயத்தின் மூலமாகவே ஒருவனுடைய வளர்ச்சி அடங்கியுள்ளது. தனித்து வாழ்வதென்பது இயற்கைக்குப் புறம்பானது.
- மனிதனின் அதிசயமான சிறப்பத்தன்மை அவனது சிந்தனா சக்தியிலேயே உள்ளது. இதன் மூலமாகத்தான் அவன் வாழ்க்கையின் ஏனைய வடிவங்களை ஆள்கின்றான்.

## இளையோர் திறன் உயர........

### தெளிவின் பயிற்சி

இன்றைய நகரும் சூழலில் இளையோரின் உழைப்பு சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது பலபேர் பகிர்ந்து கொள்ளும் கருத்து. இளைஞர்கள் தவறான வழிகளில் தங்களை இழந்து கொண்டு தங்களின் முழுத்திறனையும் விரயம் செய்கிறார்கள் என்பது தான் இந்தப் பகிர்வுகள் தரும் உரத்த குரல்! விரக்தி என்கிற மனதில் அழுத்தமே இளையோரின் பல்வேறு செயலுக்கு முட்டுக்கட்டையாக நிற்கிறது. விரயம் என்பதே விரக்தி மனநிலைக்கு அடிப்படைக் காரணமாகிறது.

பல்வேறு போட்டித் தேர்வின் முடிவுகள் வரும்போதெல்லாம் அவற்றில் பெற்றுள்ள இளைஞர்களின் பதில் என்னவாக இருக்கும்? "நான் முயற்சி செய்து படித்தேன்..... ஒரு நிமிடம் கூட விரயம் செய்யவில்லை." இந்தப் பதில் தான் அவர்களின் பதிலாக இருக்க முடியும். "விரயம் இல்லை" என்ற முழக்கம் தான் பல ஆயிரம் இதயங்களுக்கு வெற்றிகளைப் பறித்துத் தந்துள்ளது. சாதனை என்பதை மனத் தெளிவின் பயிற்சியினால் எளிதில் அடைந்து விடலாம் என்பதற்குச் சான்றுகள் ஏராளம்.

பெரிய பெரிய சாதனையாளர்களின் வாழ்வில் எல்லாம் சின்னச் சின்னப் பொறிகள்தான் தடம் மாறியுள்ளன என்பதே வரலாற்று உண்மை. எந்தச் சூழலிலும் அவர்கள் உணர்வுத் தளத்தில் அடிமையாகாமல் அறிவுத் தளத்தில் சிந்தித்தார்கள் என்பதே உண்மை.

9 ஆண்டுகாலம் அலுவலகம் ஒன்றில் எழுத்தாளராக இருந்து சம்பாதித்ததை ஆசிரியராகிப் பத்தே மாதங்களில் மிகப் பெரிய புகழோடு சம்பாதித்தாரே **பெர்னாட்ஷா** அதுதான் முயற்சி.

நிலக்கரிச் சுரங்கத்தில் கூலியாளராகப் பணியாற்றிய **ஜார்ஜ் ஸ்டீவன்சன்** தான் இரயில் எஞ்சின் என்கிற அற்புதமான கருவியைத் தந்தவர் என்றால் அதுதான் சாதனை.

செய்தித்தாள் போடும் பையன் **தாமஸ் ஸ்லிப்டன்** தான் உலகின் மிகப் பெரிய தேயிலை மன்னராகத் திகழ்ந்தார் எனில் அதுதான் கடின உழைப்பு.

அச்சகத்தில் பசை ஒட்டும் **சிறுவன் மைக்கேல் பாரடே** தான் டைனமோ என்ற மிக நுட்பமான சாதனத்தைத் தந்தவர் என்றால் அதுதான் வெற்றி.

வறுமையின் கழுத்துத் தெரிப்பில் நான்காம் வகுப்பிற்கு மேல் படிக்க இயலாத **சார்லஸ் டிக்கன்ஸ்** தான் உலகிற்குப் பல்வேறு புதினங்களைத் தந்தார் எனில் அது தான் திறமை ....... இன்னும் பெரிய சாதனையாளர்களாக அறியப்படுவோம்! அழைக்கப்படுவோம்! வரலாற்றில் பேசப்படுவோம்! அதற்கான மனத்தெளிவில் **செயல்படுவோம் வேகத்தோடும், விவேகத்தோடும் நம் இதயம் இயங்கும்வரை....!**

தொடரும்.........

# குடும்ப நற்பணிகள் ஆண்டு

01. மனித சித்திரத்தில் சில விடயங்கள் பொதுவாகவே உள்ளன. இயற்கைச் சட்டம் என்பது ஒவ்வொருவரது உள்ளத்திலே பதியப்பட்டுள்ளது (உரோ: 2,14....) என்னைப்போல அடுத்திருப்பவரையும் அன்பு செய்வது எல்லாராலும் உணரப்படக்கூடிய சட்டமாகும். இயேசுவும் இதை வலியுறுத்தினார். (மத் 7:12, லூக் 6:31).

02. குடும்பம் எனும் நற்செய்தியை தொடக்கநூல் முதல் இரு அதிகாரங்களிலும் காண்கிறோம். இதன் மூலம் குடும்பம் பற்றிய இறைவனின் திட்டத்தை அறியலாம். மூன்று விடயங்கள் தெளிவாகின்றன.

1. "கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார்
கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார்
ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்."
(தொ.நூ 1:27).

மனிதன் தனித்த ஒரு படைப்பாக கடவுளால் உருவாக்கப்படவில்லை. "மனிதன் தனிமையாக..." (தொ.நூ 2:18), "இதோ! இவனோ என் எலும்பின் எலும்பும் ...." (தொ.நூ. 2:23).

2. "கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்" (தொ.நூ 1:28). ஆண், பெண் இருவரும் தமது திருமண உறவாக குழந்தைகளைப் பெற்றெடுக்கின்றனர். பிள்ளைகளுக்குப் பெற்றோரின் பாதுகாப்பும் பராமரிப்பும் தேவை. பிள்ளைகள் இறையாசீரின் கனிகளே.





படைப்பின் ஆசீர் ஆபிரகாமின் பிள்ளைகளில் தொடர்கின்றது. (தொ.நூ 12:2..., 18:18, 22:18). மிகவும் பெறுமதி வாய்ந்த சொத்தாகிய மனித பெருக்கத்தை கடவுள் ஆண், பெண் பொறுப்பில் விட்டு விடுகின்றார். பெற்றோர் தமது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றித் தீர்மானிக்கிறார்கள்.

3. "....... மண்ணுலகை நிரப்புங்கள் அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்." (தொ.நூ 1:28) என்றார்.

- ஆற்றலுக்கு உட்படுத்துங்கள் என்பது இன்று தவறாகப் புரிந்து கொள்ளப்படுகின்றது.
- மனிதன் இவ்வுலகை ஓர் தோட்டம் போல பராமரிக்க வேண்டும்.
- உலகம், இயற்கை, மனிதர் ~ அனைத்தும் மனிதரின் பராமரிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.
- குடும்பங்கள் உயரவும். உலகின் வளர்ச்சிக்குத் தமது பங்களிப்பை செய்யவும் அரசு எப்போதும் உதவவேண்டும்.
- பெற்றோர், பெண்கள், பிள்ளைகள், முதியோரின் பாதுகாப்பிற்கும் வளர்ச்சிக்கும் அரசு உரிய சட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தூய ஜோசேப் வாஸ் அடிகளாரின் ஒரு சில வாழ்க்கைக் குறிப்புகள்

சென்ற இதழின் தொடர்ச்சி....

**37. பல்லேகந்தலையிலுள்ள தூய அந்தோனியார் தேவாலயம்**
வில்பத்து மண்ணில் பாதுவா தூய அந்தோனியாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட இவ்வாலயமானது, தூய ஜோசேப் வாஸ் அடிகளாரின் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இவ்வாலயத்திற்கு தூய ஜோசேப் வாஸ் அடிகளார் நான்கு முறை வருகை தந்திருந்ததாக அறியப்படுகின்றது. சிலாப மறைமாவட்டத்தின் பிரதான தேவாலயமாக இது கருதப்படுகின்றது.

**38. புத்தளத்திலுள்ள ஒறத்தோரியன் மத்திய நிலையம்**
தூய ஜோசேப் வாஸ் அடிகளாரின் காலத்தில் இலங்கையில் இருந்த மிகப்பெரிய பணிமனையும் ஆலயமும் இதுவாகும். அக்காலத்தின் மலையக இராச்சியத்துக்கு சொந்தமாயிருந்த ஒரே ஒரு துறைமுகம் புத்தளம் துறைமுகமாகும். ஒவ்வொரு வருடமும் தவக்காலத்தில் இவ்வாலயத்தில் சந்திப்புக் கூட்டங்கள் இடம் பெற்றதுடன், முதிர்ந்த வயதுடைய மற்றும் நோயாளர்களான குருக்களுக்கு தேவையான மருத்துவ வசதிகளும் இங்கு காணப்பட்டன. அத்துடன் மரணம் அடைந்தவர்களை அடக்கம் செய்வதற்கான வசதிகளும் இங்கு காணப்பட்டன. இம்மத்திய நிலையம் இருந்த இடத்தையும் அதை சுற்றியுள்ள பிரதேசத்தையும் தற்போது முஸ்லிம் மக்கள் உரிமை ஆக்கிக் கொண்டுள்ளனர்.

**39. பாலக் குடாவிலுள்ள தூய பேதுரு, தூய பவுல் ஆலயம்**
கற்பிட்டி வளைகுடாவில் காணப்படும் மிகப் பழமை பொருந்திய தோலயம் இதுவாகும். தூய ஜோசேப் வாஸ் அடிகளார் புத்தளத்திற்கு சென்ற போது, போர்த்துக்கேயர் காலத்தில் இயேசு சபைக்குருக்களால் கட்டப்பட்ட தேவாலயம் இதுவென்று அறிய முடிகின்றது. மேலும் இக்காலத்தில் வருகை தந்த அருட்பணியாளர் ஜோன் பிரகன்சா அடிகளார் இவ்வாலயத்திலேயே வாழ்ந்ததாக அறியப்படுகின்றது.

**40. வரலாற்று சிறப்பு மிக்க, அழகிய மரத்தினாலான மானின் வளைவு**
இவ்வாலயம் வரலாற்று சிறப்பு மிக்க ஆலயமாக இருப்பதுடன், அழகிய மரத்தினாலான மானின் மர வளைவு ஒன்றும் இங்கு காணப்படுகின்றது. பழம் பெரும் காலத்தில் பாஸ்கு நிகழ்வுகளில் நடிப்பதற்காக பாவிக்கப்பட்ட சுருவங்களின் ஒருசில பகுதிகளை இன்றும் இங்கு காணக் கூடியதாக உள்ளது. இவை அனைத்தும் ஒறத்தோரியன் சபைக்குருக்களின் சிறப்பான மறைதூதுப் பணிக்கு சான்றாக உள்ளன.

**41. காட்டு தேவாலயம்**
கற்பிட்டி வளைகுடாவில் அமைந்துள்ள 300 வருட பழமை வாய்ந்த ஒறத்தோரியன் சபை குருக்களின் மறைப்பணியின் நடு நிலையமாக விளங்கிய இத்தேவாலயம் அவர்களின் பணி மனையாக ~விளங்கியது இன்றும் காணக்கூடியதாக உள்ளது. பாதுவா புனித அந்தோனியாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட இத்தேவாலயமானது சிலாப மறைமாவட்டத்தின் பிரதான தேவாலயமாகும்.



# மத்தேயு நற்செய்தி: ஓர் அறிமுகம்

இயேசு இறைவாக்குகளின் நிறைவு

தொடர்ச்சி ................

| | | | |
|---|---|---|---|
| 1 : 22~23 | = எசா 7 : 14 | 2:15 | = ஓசே 11:1 |
| 2 :17~18 | = எரே 31: 15 | 2:23அ | = எசா 11:1 |
| 4 :14~16 | = எசா 8 : 23 | 9:1, 8:17 | = எசா 53:4 |
| 12 :17~21 | = எசா 42: 1~4 | 13:35 | = திபா 78:2 |
| 21 : 4~5 | = எசா 62:11, செக் 9:9 | 27: 9~10 | = செக் 11:12~13 |
| 13:14~15 | = எசா 6:9~10 | | |

இயேசுவின் பிறப்பிலிருந்து இறப்பு வரையுள்ள சிறப்பு நிகழ்வுகளில் பழைய ஏற்பாட்டு இறைவாக்குகள் நிறைவு பெறுவதைத் தெளிவாகக் காண இயலுகின்றது. எபிரேயக் கிறிஸ்தவர்களுக்கு எழுதிய இந்த நற்செய்தி கிறிஸ்தவர்களுக்கு புதிய ஏற்பாட்டின் நற்செய்தி எந்த விதத்திலும் முரண்பாடாகவோ அல்லது மாற்றுச்செய்தியாகவோ அல்லாமல் பழைய ஏற்பாடு பழைய எபிரேயருக்கும் பழையதின் நிறைவாகப் புதிய ஏற்பாடு புதிய எபிரேயராகிய கிறிஸ்தவர்களுக்கும் உரித்தாகியுள்ளது என சுட்டிக்காட்டுகின்றது.

எபிரேயப் பாரம்பரியம் மோசேயை மையமாகக் கொண்டு இயங்கியது. அச்சுட்டங்கள் துவங்கிய காலம் மோசேயின் காலம். அச்சுட்டங்கள் நிறைவுபெற்ற நேரம் மோசேயின் நேரம் புதிய மோசேயாகிய இயேசுவின் காலம். மத்தேயு இயேசு மைய நற்செய்தியை எபிரேயக் கிறிஸ்தவர்களுக்கு எழுதினார். இஸ்ரயேலரின் அரசியல் விடுதலைப் பயணத்தைத் தலைமை ஏற்று நடத்தியவர் புதிய மோசேயாகிய இயேசு. இப்பயணத்தில் இயேசுவின் பணிகளையும். போதனைகளையும் விவரித்து மெசியாவாகிய இயேசு தான் பழைய ஏற்பாடு முன்குறித்த தலை சிறந்த தலைவன் என்று மத்தேயு தன் நற்செய்தியில் கூறுகின்றார்.

**மத்தேயு காட்டும் இறையரசு**
தன்னலம், பதவி, அதிகாரம் என இவ்வுலக அரசுகள் போட்டியிட்டுக் கொண்டிருக்கிற வேளையிலே இதற்கு முடிவே கிடையாதா? மக்களின் சமூக, சமய, பொருளாதார தேவை~களை முன்னிறுத்தி ஒரு அரசு எழ முடியாதா? என்னும் ஏக்கம் மனித மனங்களில் எழுவது இயற்கை. இந்த மனித ஏக்கத்தை நிறைவு செய்வது தான் இயேசு போதித்து, சாதித்துக் காட்டிய "இறையரசு/விண்ணரசு" தத்துவம்.

**இறையரசா? விண்ணரசா?**
ஒத்தமை நற்செய்தியாளர்களில் மாற்கு 14 முறையும் லூக்கா 32 முறையும் "இறையரசு" என்னும் சொல்லைப் பயன்படுத்த, மத்தேயு நான்கு மறை மட்டும் பயன்படுத்தியுள்ளார் (12:28, 19:24, 21:31,43) ஆனால், மற்ற இரு நற்செய்தியாளர்களும் பயன்படுத்தாத "விண்ணரசு" எனும் சொல்லை 32 முறை பயன்படுத்தியுள்ளார்.

தொடரும்.................

நன்றி ~ விவிலிய விருந்து

# விவிலியத்தில் குடும்பம்

சென்ற இதழின் தொடர்ச்சி....



**"தாயையும் தந்தையையும் தவிக்கும்படி விட்டு விட்டுத் தனிக்குடித்தனம் அமைப்பதா? "**



விவிலியம் காட்டும் விதிமுறை !

ஆக, அவனது ஆளுமையில் பங்கு பெறுபவளும், அவனுக்கு இணையானவளுமாய் அவள் இருப்பது அவர்களுக்கிடையே உள்ள ஒற்றுமை. அதே வேளையில் அவனிடமிருந்து வேறுபட்டவளாயும், எதிர்மாறானவளாயும் இருப்பது வேற்றுமை. இவ்வாறு ஒற்றுமையும் வேற்றுமையும் இணைந்த "ஆள்" ஒன்றிப்பே உண்மையான திருமண உறவு என்பதை ஆசிரியர் உணர்த்த விழைகிறார் என்பது உறுதி.

**2. ஆன்மீக ஒன்றிப்பின் அடையாளமே உடல் உறவு**
உறவு முறைகளில் பற்பல முறைகளை வகுத்து வைத்திருக்கிறது மனித சமுதாயம்: பெற்றோர் ~ பிள்ளை உறவு; உடன் பிறந்தார் உறவு; நட்புறவு; இவை அனைத்திலிருந்தும் வேறுபட்டது கணவன் மனைவி உறவு. இது ஒருவரை ஒருவர் மனமார ஏற்றுக் கொண்டு, தன்னையே முழுமையாகத் தற்கையளிப்பு செய்து, ஒருவர் ஒருவரது உள்ளத்தையும் ஊனங்களையும் உவந்தேற்று வாழ்நாள் முழுதும் உறவுடன் வாழ்வதற்கான அடையாளமாய் அமைவது தான் உடல் உறவு. இது மற்ற விலங்கினங்களுக்கிடையே காணப்படுகின்ற உந்ததலால் மட்டும் உருவாகின்ற உடல் கலவை மட்டும் அல்ல. மாறாக, ஒருவர் ஒருவரது ஆன்மாவோடு ஒன்றித்து மகிழும் மிகமிக ஆழமான உறவு. ஒருவரை ஒருவர் நிறைவுபடுத்துகின்ற நெருக்கமான உறவு, நிலையான உறவு, பிறர் யாருமே தலையிட முடியாத தனித்தன்மையான உறவு.

எனவே தான் "கணவன், தன் தாய் தந்தையை விட்டுத் தன் மனைவியோடு ஒன்றித்திருப்பான் இருவரும் ஒரே உடலாய் இருப்பர்"என்று திருஆசிரியர் பதிவு செய்துள்ளார். யூத சமுதாயத்தில் திருமண~மான பின் பெண்தான் தன் பெற்றோரை விட்டுப் பிரிந்து கணவனோடு வாழ வேண்டும் என்பதுதான் வழக்கம். அதற்கு நேர்மாறாக இங்கு கணவன் தன் பெற்றோரை விட்டுத் தன் மனைவியோடு ஒன்றித்திருப்பான்" என்று கூறுகிறார். எனின், கணவன் தன் மனைவியை தன்னுயிராகவே கணிக்க வேண்டும். தனக்கு இணையாக, நிகராகக் கடவுளால் தரப்பட்ட கூட்டாளி என்பதைப் புரிந்து தன் "தனிமையைப்" போக்கும் நிறைவாளியாகப் பார்த்து மதிப்போடும் உண்மையான அன்போடும் நடந்து கொள்ள வேண்டும் என்பதை திருஆசிரியர் நிறுவ நினைப்பது தான் இப்படி வரைவதற்கான காரணம்.

இருவருள் எவருமே முழுமையானவர் அல்ல. ஒருவர் பாதி, மற்றவர் மீதி. இருவரும் இணைந்து செயல்படும் போது, நினைக்கும் போது, வாழ்கின்ற போதுதான் முழுமை பெறுகின்றனர். உடல் சார்ந்த முறையிலும் சரி, உள்ளம் சார்ந்த விதத்திலும் சரி, ஒருவர் ஒருவரால் நிறைவாக்கப்படக் காத்திருக்க வேண்டியவர்களாய்தான் மானுட இயல்பு காட்டுகிறது. அதாவது, ஒருவரை ஒருவர் மனமுவந்து தற்கையளிப்பு செய்து கொண்டால் ஒழிய, அந்த நிறைவாக்கம் நிகழாது. இந்தத் "தற்கையளிப்பு" ஆன்மீக ஒன்றிப்பால் மட்டுமே நிகழக் கூடியது. அந்த ஆன்மீக ஒன்றிப்பின் வெளிப்பாடாகவும், அதன் அடையாளமாகவும் விளங்குவதே இருவரும் ஈடுபடும் உடல் ஒன்றிப்பு. இதைச் சுட்டிக்காட்டும் வகையில் தான் திருஆசிரியர் " இனி இவர்கள் ஒரே உடலாய் இருப்பர்" என்று இங்கு கூறுகிறார்.

தொடரும் .............

நன்றி ~ விவிலிய விருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவடக்கம்

கடவுள் எமக்கு கொடுத்த பாரிய பெறுமதி மிக்க கொடை எமது "நாக்கு". இந்த நா வாயினுள் வைத்து பூட்டு போட்டதைப் போல் அடங்கியிருக்கின்றது. இந்த நா வாயினுள்ளே இருக்கும் வரை நாம் எஜமான்.வாயிலிருந்து வெளிவந்த வார்த்தை எமக்கு எஜமான்.

கடவுளைப் புகழ்ந்து பாடுவதம், செபவழிபாடுகளில் ஈடுபட்டு இறைபாதம் எம்மை அர்ப்பணிக்கின்றோம். குழந்தையாக இருக்கும் போது மழலைச் சொற்களில் ஆரம்பித்துப் பெற்றோர், உற்றார். பெரியோர், அயலவர்களுடன், நண்பர்களுடன் உரையாடப் பாவிப்பதும் இந்நாவையே.

பாடசாலை ஆரம்பநாள் முதல் இறுதிநாள் வரை கல்வியில் தேர்ச்சியடைய உறுதுணையாகவுள்ளது இந் நாவே. விட்டிற்கு வரும் அனைவரையும் அன்பு காட்டி உபசரிப்பதற்கு ஏதுவாகவுள்ளதும் இந் நாவே. எவரையும் வாழ்த்திப் பேசுவதற்கு உதவும நாவை சிலவேளைகளில் பிழையான வழிகளுக்குப் பளன்படுத்துகின்றோம்.

பெற்றோர், பெரியோர்களுக்கு கீழ்ப்படியாமல் அவர்களுக்கெதிரான வார்த்தைகளும், தகாத காரியங்களைப் புரிந்து பொய்யான கூற்றக்களைக் கூறவும் பக்கபலமாக இருப்பதும் இந் நாவே. மற்றவர்களை வாழ்த்த உதவும் இந் நாக்கை அவர்களை தூற்றவும் உபயோகப்படுத்துகின்றோம். ஏன் எத்தனையோ அரசியல்வாதிகள் கூட தேர்தல் வாக்குறுதிகளைக் கூறும் ஆயுதமாக இந் நாவை பிரயோசனப்படுத்துகின்றார்கள். நிதிமன்றங்களில் கூட குற்றவாளிகள் பொய்யான விடயங்களைக் கூறி தப்புவதற்குப் பாவிக்கும் கருவியும் இந் நாவே.


மேலும் எத்தனை நல்ல குடும்பங்கள் பிரிவதற்கும் இந் நாவையே பிரயோகிக்கின்றோம். "சமய ரீதியில் பார்த்தாலும் மரியாளுக்கு மங்கள வார்த்தைக் கூறியதும் " இந் நாவால் தான். தூய ஆவி இயேசுவின் சீடர்கள் மேலிறங்கியதும் அக்கினி நாக்கு உருவில் தான். என்ன புனிதமான செயல்.

நாமும் இந்நாவினால் எத்தனை மனதைத் தினமும் புண்படுத்திக் கொண்டிருக்கின்றோமா? அல்லத மக்களுடன் அன்பாகக் கதைத்து இறைபுகழ் பாடுகின்றோமா? என சற்ற சிந்தித்து இனிமேலாவது மனதில் மாற்றமுள்ள நாவடக்கமுள்ள மனிதராக வாழ முயல்வோமாக.

ஆக்கம் : ச. அந்தோனிப்பிள்ளை ~ அ. இ. ச. நீ

# மறைமாவட்ட விவிலிய பேச்சுப்போட்டி முடிவுகள் - 2017

கடந்த 01.07.2017 அன்று நடைபெற்ற மறைமாவட்ட விவிலிய பேச்சுப் போட்டி முடிவுகள் வருமாறு,



## தமிழ் மொழி

### தரம் 6,7,8 கனிஷ்ட பிரிவு

1ம் இடம் செல்வி சுமேந்திரா வேனுஜா ~ அலஸ்தோட்டப் பங்கு

2ம் இடம் செல்வி தேவகாந்தன் பியான்சி ~ உவர்மலைப் (இலிங்கநகர்) பங்கு


3ம் இடம் செல்வி தீஷா பிரதீஸ் லூக் ~ குவாடலூப்பே பங்கு

### தரம் 9, 10, 11 சிரேஷ்ட பிரிவு

1ம் இடம் செல்வி சிறிஸ்கந்தராஜா ஹம்சாலினி ~ இருதயபுரப் பங்கு

2ம் இடம் செல்வன் அற்புதராதா டிரோன் ~ உவர்மலைப்பங்கு

3ம் இடம் செல்வி அன்ரன்நைனஸ் சருணியா ~ அலஸ்தோட்டப் பங்கு



## ஆங்கில மொழி

### தரம் 6,7,8 கனிஷ்ட பிரிவு

1ம் இடம் செல்வி இருதயராசா பிரவீனா ~ உவர்மலைப்பங்கு

2ம் இடம் செல்வி டொறின் சிரோமியா ஞானப்பிரகாசம் ~ குவாடலூப்பே பங்கு

### தரம் 9, 10, 11 சிரேஷ்ட பிரிவு

1ம் இடம் செல்வி லக்ஷிக்கா கொனஸ்ரி நேசராஜா ~ குவாடலூப்பே (பள்ளத்தோட்டம்) பங்கு

2ம் இடம் செல்வன் நோயல் டானியேல் திகாஷன் ~ உவர்மலைப்பங்கு



## சிங்கள மொழி

### தரம் 6,7,8 கனிஷ்ட பிரிவு

1ம் இடம் செல்வன் யோஹான் ஏனஸ்ற் கீத் ~ சீனன்குடா (ஆண்டாங்குளம்) பா

2ம் இடம் செல்வி எம்.ஏ. சசனிக்கா அரனி ~ சீனன்குடாப்பங்கு

3ம் இடம் செல்வி எம். ஏ. ஹசாஞ்சலி ~ குச்சவெளிப்பங்கு

### தரம் 9, 10, 11 சிரேஷ்ட பிரிவு

1ம் இடம் செல்வி எம். ஜி. எஸ். மகேஷிக்கா ~ சீனன்குடா (ஆண்டாங்குளம்) ப

2ம் இடம் செல்வன் நிஸான் சமரசிங்க அத்தபத்து ~ சீனன்குடாப்பங்கு

3ம் இடம் செல்வி நெற்மீ சன்சலா ~ குச்சவெளிப்பங்கு

**பங்கு பற்றிய அனைவருக்கும் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்**

புகைப்படம் 12ம் பக்கத்தில்..........

# செல்வநாயகபுர தூய வனத்து அந்தோனியார் திருவிழா

தூய வனத்து அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா கடந்த மாதம் 02.06.2017 அன்று மாலை 5.30 மணிக்கு எமது புதிய பங்குத்தந்தை அருட்தந்தை யூஜின் போல் ஜொனத்தன் அவர்களினால் பாரம்பரிய முறையிலாக கொடிமரம் ஆசிர்வதிக்கப்பட்டு இறைமக்கள் அனைவராலும் மேலே உயர்த்தப்பட்டு கொடியேற்றம் நடைபெற்றது.

அதனை தொடரந்து ஒவ்வொருநாளும் 5.30 மணிக்கு திருச்செபமாலையும் திருப்பலியும் நிறைவேற்றப்பட்டதுடன், ஒவ்வொருநாள் திருப்பலி முடிவிலும் அன்றைய மறையுரையில் இருந்து 3 கேள்விகளும், எமது பாதுகாவலராம் தூய வனத்து அந்தோனியார் பற்றிய ஒரு கேள்வியும் கேட்கப்பட்டு அதற்கான பரிசில்களும் வழங்கப்பட்டது. 10.06.2017 சனி மாலை 5.00 மணிக்கு ஆலயத்தில் இருந்து புனிதரின் திருச்சுரூபம் செல்வநாயகபுர வீதிகளினூடாக பவனியாக எடுத்துச் செல்லப்பட்டு 7.00 மணியளவில் ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்டு, நற்கருணை ஆராதனை இடம்பெற்று நற்கருணை நாதரின் ஆசீர் அருளப்பட்டது. 11.06.2017 ஞாயிறு காலை திருவிழா திருப்பலி எமது மறைமாவட்ட ஆயர் அதிவந்தணைக்குரிய கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களின் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்பக் கொடுக்கப்பட்டது. மாலை ஆலய வளாகத்தினுள் பலவிதமான விளையாட்டுக்கள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டது.

தகவல் : பங்குச்சபை,
செல்வநாயகபுரம்.

# அருட்பணி சைமன் கிறகரி பெரேரா இ.ச. பிறப்பின் 125வது ஆண்டு நினைவுகூரல். (1882 - 2017)

இலங்கையின் கத்தோலிக்க விசுவாச வரலாற்றில் இயேசு சபையினரின் பங்கு மறுக்கப்படவோ, மறைக்கப்படவோ முடியாத ஒரு பகுதியாகும். அவ்வகையில் இலங்கையின் முதலாவது இயேசு சபைத் துறவியாகக் கணிக்கப்படும் **அருட்பணி சைமன் கிறகரி பெரேராவின்** (S. G. Perera) வாழ்வும் பணியும் கத்தோலிக்கர் அனைவருக்கும் ஒரு நல்ல முன்னுதாரணமாகும்.

அருட்பணி S. G. பெரேரா 05 யூன் 1882 இல் களுத்துறையில் பிறந்தார். 05 செப்டெம்பர் 1905 இல் அவர் இயேசு சபையில் இணைந்தார். இயேசு சபையின் ஆரம்ப உருவாக்கத்தின் பின் மேற்படிப்புக்காக உரோம் நகருக்கு அனுப்பப்பட்டார். அங்கு கல்வி கற்கும் காலத்திலேயே இலங்கையில் பணிபுரிந்த இயேசு சபைக் குருக்கள் அனுப்பிய கடிதங்களை நிழற்பிரதியாகப் பெற்று அவற்றை மொழிபெயர்க்க



தொடங்கினார். அவற்றை ஆங்கில மொழியில் முன்னணிச் சஞ்சிகைகளில் வெளியிட்டார்.

இதன்பின் இலங்கையின் விசுவாசத்தைப் பாதுகாக்கப் போராடிய **தூய யோசேப் வாஸ்** மற்றும் ஒறத்தோரியன் சபைக் குருக்களின் ஆவணங்களையும் ஆங்கில மொழியில் மொழி பெயர்த்து வெளியிட்டார். இவற்றுக்குக் கிடைத்த வரவேற்பின் பலனாகத் தூய யோசேப் வாசின் வாழ்வைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டார். இதவே தூய யேசேப் வாசின் வரலாறு தொடர்பான மிகத் தெளிவான, உண்மையான வரலாற்று நிகழ்வுகளைக் கொண்ட ஆவணமாக இன்றும் கருதப்படுகின்றது.

அதே போல **அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ்** அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்து அதையும் ஒரு நூலாக வெளியிட்டார். இது அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ் தொடர்பான உண்மையான வரலாற்று நிகழ்வுகளைக் கொண்ட ஆவணமாக இன்றும் கருதப்படுகின்றது.

இவரால் உருவாக்கப்பட்ட முக்கிய நூல்கள் பின்வருமாறு :

✝ The Jesuits in Ceylon (1941).
✝ Life of Fr. Jacome Goncalves (1942).
✝ Life of Fr Joseph Vaz - Apostle of Ceylon (1943).
✝ History of Ceylon for Schools from 1500 onwards.
✝ Fr Queyros " Conquista Temporal e Espiritual de Ceilao"
(இலங்கை அரசின் கோரிக்கையை ஏற்றுப் போர்த்துக்கேய மொழியில் எழுதப்பட்ட ஆறு தொகுதிகளைக் கொண்ட இந்நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்).
✝ பல்வேறு நூல்களும், கட்டுரைகளும், ஆய்வுக்கட்டுரைகளும் இவரால் எழுதப்பட்டுள்ளன.

இவரால் சேகரிக்கப்பட்ட விலைமதிப்பில்லாத பல நூல்களும், ஆவணங்களும் இவரது ஏனைய வெளியீடுகளும் கொழும்பின் களனி பிரதேசத்தில் அமைந்துள்ள **துலன** எனும் இடத்தில் அமைந்துள்ள இயேசு சபைப் பணி மையத்தில் **S.G. பெரோரா நூல் நிலையம்** எனும் பெயரில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**இவரது ஆன்மா இறைவனில் இளைப்பாறுவதாக!**

அருட்தந்தை S. R. ஜெயரெட்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவார்த்தைப் புதையல் போட்டி

**கீழ்வரும் திரு வசனங்கள் தூய மத்தேயு நற்செய்தியிலிருந்து அதிகாரங்கள் 10 – 14 வரை இவை எந்த அதிகாரம், வசனம் என்பதை எழுதி அனுப்பவும்**

01. விண்ணகத்திலுள்ள என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும் சகோதரியும் தாயும் ஆவார். ..........................

02. நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். ..........................

03. பாம்புகளைப் போல முன்மதி உடையவர்களாயும் புறாக்களைப் போல் கபடு அற்றவர்களாயும் இருங்கள் ..........................

04. தம் சொந்த ஊரிலும் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்பு பெறுவர். ..........................

05. முதலில் களைகளைப் பறித்துக்கொண்டு வந்து எரிப்பதற்கெனக் கட்டுக்களாக கட்டுங்கள், கோதுமையையோ என் களஞ்சியததில் சேர்த்து வையுங்கள் ..........................

06. என் பெயரின் பொருட்டு உங்களை எல்லாரும் வெறுப்பர். இறுதிவரை மன உறுதியுடன் இருப்போரே மீட்கப்படுவர். ..........................

07. அவர்கள் செல்ல வேண்டியதில்லை, நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள். ..........................

08. பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதன் கருத்தை நீங்கள் அறிந்திருந்தால் குற்றமற்ற இவர்களைக் கண்டனம் செய்திருக்க மாட்டீர்கள். ..........................

9. விண்ணரசில் மிகச்சிறியவரும், அவரினும் பெரியவரே என நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கின்றேன். ..........................

~10. நேர்மையாளர் தம் தந்தையின் ஆட்சியில் கதிரவனைப் போல் ஒளி வீசுவர். கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும். ..........................

பெயர் : ..........................
முகவரி: ..........................
பங்கு : ..........................

முடிவுத்திகதி : 25.08.2017

## இலங்கையின் புனிதர்

சரியான வடிவமைப்பு

இந்திய மண்ணிலே பிறந்தாலும்
இலங்கை மண்ணிலே பணிபுரிந்தார்
துன்பங்கள் துயரங்கள் வேதனைகளை
தம் பணியோடு இணைந்த திருத்தூதர்
யோசப்வாஸ் அடிகளார் காட்டிய பாதைகள்
நம் வாழ்வுக்கு எடுத்துக்காட்டாகவே
நாமும் அவரைப் பின் தொடர்வோமே.



பங்குபற்றியவர்கள் : 25 பேர்
சரியாக வடிவமைத்தவர்கள் : 04 பேர்

பரிசுத்தொகை நான்கு பேருக்கும் 225/- ரூபாவாக சமமாக பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

T.ஜெரோம்
தூய யோசேப் வாஸ்
சிறிய குருமடம்,
சாம்பல்தீவு

ஆன் வஜிரா ஆர்.எப்,
இல: 21/3,
வித்தியாலயம் வீதி,
திருகோணமலை

பகீதரன் சுரேந்திரா,
இல: 676, அன்புவழிபுரம்,
திருகோணமலை

தே.சமில்டன்,
3ம் வட்டாரம்,
நிலாவெளி

## இறைவார்த்தைப் புதையல் போட்டி முடிவுகள்

பங்குபற்றியவர்கள் : 47 பேர்
சரியாக விடையளித்தவர்கள் : 34 பேர்

பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500/- ரூபா
ம.ஜைமன்,
சந்தை விதி.
மூதூர் ~ 07

2ம் பரிசு 300/- ரூபா
ரா. யதுஷாந்,
தொண்டமனாறு
பெரிய கடற்கரை,
உடுப்பிட்டி

3ம் பரிசு 200/- ரூபா
எ.கேமியன்,
3ம் வட்டாரம்,
நிலாவெளி


**பங்கு பற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும் நன்றிகளும்**

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 23ன் விடைகள்
## 1 கொரிந்தியர் அதி 01 – 04 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கி | றி | ஸ் | து | வி | ன் | ஊ | ழி | ய | ர் |
| ■ | மா | ■ | ■ | சி | ■ | மீ | ■ | ன் | ■ |
| ம | ண் | வ | லோ | லு | ம் | ட் | ம | றே | ■ |
| னி | பு | லி | ல் | வை | ள | பு | ன | கி | ம |
| த | ள் | யோ | பொ | யி | த | பெ | மே | று | ர |
| ஞா | ள | ர் | ப் | ல் | த் | று | ய | கூ | ண |
| ன | வ | ■ | அ | ■ | டி | ம் | ன் | ரை | த |
| த் | ர் | ■ | ■ | ■ | அ | ■ | றி | வு | ண் |
| தி | க | தி | ட | உ | ண | வை | ■ | றி | ட |
| ன் | ள் | ■ | இ | று | தி | வ | ரை | அ | னை |

01. மனித ஞானத்தின்
02. மீட்பு பெறும்
03. திட உணவை
04. வலியோர்
05. மரண தண்டனை
06. அறிவுரை கூறுகிறேன்
07.மாண்புள்ளவர்கள்
08. மனமேயன்றி
09. இறுதிவரை
10. அடித்தளம்
11. சிலுவையில்
12.அப்பொல்லோ
13. கிறிஸ்துவின் ஊழியர்

**விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 23ன் முடிவுகள்**



போட்டியில் கலந்து கொண்டோர் - 52 பேர்
சரியான விடையளித்தோர் - 44 பேர்

1ம் பரிசு 500/- ரூபா
ஜெ. பெவன்,
93/49, நீதிமன்ற வீதி,
திருகோணமலை

2ம் பரிசு 300/- ரூபா
ஸோ. அருஷன்
இல. 101, காந்திநகர்,
அன்புவழிபுரம்

3ம் பரிசு 200/- ரூபா
வெ. பெனடிக்ஷன்
5ம் வட்டாரம்,
கும்புறுபிட்டி

## மரணத்தை வெற்றி கொண்டார்

**கவிதைப் போட்டி முடிவுகள்**

சரியான கவிதை வரிகள்

கல்வாரி மலை கண்ட கண்ணீராறு
புண்ணாக்கி மனங்களைப் புண்படுத்த
மண்ணின் துயர் துடைக்க வந்த மகான்
மரணித்தார் சிலுவையிலே நமக்காக
மனிதரின் தீர்ப்பு எதுவாக இருந்தாலும்
மரணம் யேசுவை மறைக்கவில்லை
மரணத்தை வென்ற மாபரன் யேசுவை
மனங்களே நிறைந்து புகழ்ந்திடுமே

பங்குபற்றியவர்கள் : 10
சரியாக வடிவமைத்தவர் : 01

பரிசுக்குரியவர் :
1ம் பரிசு 800/- ரூபா
ஆன் வஜிரா ஆர்.எப்,
இல: 21/3, வித்தியாலயம் வீதி,
திருகோணமலை

**சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்**

பங்குபற்றியவர்கள் : 35 பேர்
பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500/- ரூபா
L.S. பியூரா,
இல: 156/32, டொக்கியாட் வீதி
திருகோணமலை

2ம் பரிசு 300/- ரூபா
ரூபன் ஷனோன் றெஜிஸ்,
இல: 508, அன்புவழிபுரம்,
திருகோணமலை

3ம் பரிசு 200/- ரூபா
சு.டிஷாந்த்,
6ம் கட்டை,
கன்னியா.

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி தூய யோசேப் வாஸ்


- பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படத்திற்கு நிறம் தீட்டுதல் வேண்டும் போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது
- 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்
- 1ம் பரிசு - 500/=, 2ம் பரிசு - 300/= , 3ம் பரிசு - 200/=



பெயர் ..........................
முகவரி ..........................
பங்கு ..........................
தரம் ..........................
முடிவுத் திகதி 25.08.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைமாவட்ட விவிலிய பேச்சுப்போட்டி - 2017











## பிறந்தநாள் வாழ்த்துக்கள்





**திருமதி. செபமாலை மனோகரி குருஸ்**

27/15, 1ம் ஒழுங்கை, பூம்புகார் வீதி, பாலையூற்று,
திருகோணமலை.

திருமதி செபமாலை மனோகரி குருஸ் அவர்கள் தமது எழுபத்தைந்தாவது பிறந்தநாளை கொண்டாடுகின்றார் இவர் அருட்பணியாளர்கள் சுகுனேந்திரன் குருஸ், மதுராங்கன் குருஸ் இவர்களின் தாயாராவார். தனது குடும்பத்திலிருந்து இருபிள்ளைகளை இறைபணிக்காகத் தந்தவர் இவரை இவரின் பிள்ளைகளும் மருமக்களும், பேரப்பிள்ளைகளும் உற்றார் உறவுகளும் ஒன்றிணைந்தே இவரின் பிறந்தநாள் வாழ்த்தினைக் கூறுகின்றார்கள்

தொடர்ந்தும் ஏதும் குறைகளின்றி இன்னும்
பல்லாண்டுகள் வாழவே
எங்கள் உள்ளங்கனிந்த வாழ்த்துக்களைக்
கூறுகின்றோம்.

– திருமலைத்தீபம் –

## மறை மாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் செயற்குழு நிலாவெளி பங்கிற்கு விஜயம்



## குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழா காணும்

# அருட்பணியாளர்கள்

எமது மறைமாவட்டத்தில் பணியாற்றியவர்களும் எமது மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர்களும்

*Admoltus Annos Vivat 25*



**16.09.2017**

**அருட்தந்தை என்.சி. அருள்வரதன்**

திருமறைக்கல்வி நடுநிலைய இயக்குனரும், திருமலைத்தீப ஆசிரியரும், கன்னியா கிறிஸ்து அரசர் ஆலயத்தின் பங்குத்தந்தையும் ஆவார்.



**24.09.2017**

**அருட்தந்தை ஜோசப் இக்னேஷியஸ் சந்திரா**

திருகோணமலை மூதூர் பங்கில் 1992ம் ஆண்டு முதல் 1993ம் ஆண்டு வரை பங்குத்தந்தையாக பணியாற்றினார். தற்போது மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் பணியாற்றுகின்றார்.



**28.07.2017**

**அருட்தந்தை அ. பி. லொசிங்டன் அ.ம.தி**

திருகோணமலை சாம்பல்தீவு தூய திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் 2014ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதல் 2017ம் ஆண்டு ஜனவரி மாதம் வரை பங்குத்தந்தையாக பணியாற்றினார்.



**22.08.2017**

**அருட்தந்தை பிரட்லி றொசாய்ரோ அ.ம.தி.**

திருகோணமலை மறைமாவட்ட பாலையூற்று தூய லூர்து அன்னை திருத்தல பங்கு மகனும் முதற்குருவும், கிழக்கு மாகாணத்தின் முதல் அ.ம.தி.யும் ஆவார். தற்போது ஜப்பானில் பணியாற்றுகிறார்.



**22.08.2017**

**அருட்தந்தை யூட் பீரிஸ் பிள்ளை அ.ம.தி**

1993ம் ஆண்டு முதல் 1995ம் ஆண்டு வரை திருகோணமலை மறைக்கல்வி நிலையத்தில் சகோதர மொழிப்பகுதிக்கு பொறுப்பாளராகப் பணியாற்றியவர். தற்போது ஜப்பானில் தனது பணியைத் தொடர்கிறார்.

**இறைவனது பணிக்கென தங்களை இணைத்து இறைத் துணையுடன் தங்களது பணியைச் செய்து 25 வருடத்தில் காலடி எடுத்து வைத்திருக்கும் அருட்தந்தையர்களுக்கு எமது இதயம் கனிந்த வாழ்த்துக்களும் இறையாசீர்களும் உரித்தாகுக!**

– திருகோணமலை மறைமாவட்டம் –

## மரியாயின் சேனை வெளிக்கள விழா 24, 25ம் திகதி ஆனி - 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org